Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 197 | சனிக்கிழமை 11 ஜூன் 2022 | வைகாசி 28 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50

## 800 லாப்ஸ் சிலிண்டர் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணத்தில் இன்று பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் சுமார் 800 லாப்ஸ் சிலிண்டர்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. 16 ➤

## திங்கட்கிழமை அரச விடுமுறை!

கொழும்பு, ஜூன் 11

ஜூன் மாதம் 13ஆம் திகதி திங்கட்கிழமை அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரால் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. 16 ➤

## பாடசாலைகளுக்கும் திங்கள் விடுமுறை!

கொழும்பு, ஜூன் 11

எதிர்வரும் 13ஆம் திகதி அரசாங்க விசேட விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அன்றைய தினம் அனைத்து அரச பாடசாலைகளுக்கும் மற்றும் கத்தோலிக்க பாடசாலை 16 ➤

### பொருளாதார நெருக்கடியால்

# இலங்கையில் விரைவில் மனிதப் பேரவல நிலை

### ஐ.நா. பகிரங்க எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 11

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள மிகமோசமான பொருளாதார நெருக்கடி, மிகப்பெரும் மனிதப் பேரவல நிலையை ஏற்படுத்தலாம் என்று ஐக்கிய நாடுகள் சபை வெளிப்படையாக எச்சரித்துள்ளது. 15 ➤

### வவுனியாவில் துயரம்

## இளம் குடும்பப் பெண் சடலமாக நேற்று மீட்பு

வவுனியா, ஜூன் 11

வவுனியாவில் கிணற்றில் இருந்து இளம் குடும்பப் பெண்ணொருவர் நேற்று இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்துஜா (வயது-30) என்ற நபரே சடலமாக மீட்கப்பட்டவராவார். 16 ➤

### காலிமுகத்திடல்

## ஆர்ப்பாட்டக்காரர்களின் கரங்களில் குருதிக்கறை

### போராட்டங்களால் பதவி விலகிய மஹிந்த நேற்று சீண்டல் கருத்து

கொழும்பு, ஜூன் 11

காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள். அவர்களின் கரங்களில் குருதிக்கறை படிந்துள்ளது என்று தெரிவித்தார் முன்னாள் பிரதமரும், காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டங்களால் பதவி விலகியவருமான மஹிந்த ராஜபக்ச. 15 ➤



"இப்பிடி புதையலை எல்லாம் தோண்டி தங்கத்தை எல்லாம் வித்தால் டொலர் பிரச்சினை தீர்ந்து போடுமே... ஐடியா இல்லாத அரசாங்கம்!"

## எம்.பி. ஆகின்றார் தம்மிக்க பெரேரா

கொழும்பு, ஜூன் 11

பஸில் பதவி விலகியதை அடுத்து ஏற்பட்ட தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்துக்கு தம்மிக்க பெரேராவின் பெயரைப் பரிந்துரைத்துள்ளது பொதுஜன பெரமுன. 15 ➤

## டெங்குக் காய்ச்சலால் குடும்பத்தலைவர் சாவு!

யாழ்ப்பாணம், ஜூன் 11

டெங்குத் தொற்றுக் காரணமாக குடும்பத்தலைவர் ஒருவர் நேற்று உயிரிழந்தார். காக்கைதீவு பகுதியைச் சேர்ந்த இந்திரராசா ஜெகதீசன் (வயது-41) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் டெங்குத் தொற்றுக் காரணமாக கடந்த 8ஆம் திகதி மருத்துவ 16 ➤

## விபத்தில் நபரொருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 11

கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற 15 ➤

## தங்கம் தோண்டிய எழுவர் கைதாகினர்

### இருபாலையில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஜூன் 11

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலைப் பகுதியில் தங்கம்தோண்ட முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் வீட்டின் உரிமையாளர் உட்பட ஏழு பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர். 15 ➤

### மன்னாரில் கோரம்

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் வெட்டிப்படுகொலை

### மாட்டுவண்டிச் சவாரியில் ஏற்பட்ட மோதலே காரணம்

மன்னார், ஜூன் 11

மன்னார் - நொச்சிக்குளம் பகுதியில் வாள்வெட்டுத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மாட்டுவண்டிச் சவாரியில் ஏற்பட்ட மோதலே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் 15 ➤

### குளவிக்கொட்டுக்கு இலக்காகி

## 18 மாணவர்கள் மருத்துவமனையில்!

### நெல்லியடி மத்திய கல்லூரியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணம் - நெல்லியடி மத்திய கல்லூரியில் குளவிகளால் தாக்கப்பட்டு 18 மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 15 ➤

## குருந்தூரில் அடாத்தாக குந்துகிறார் புத்தர்!

முல்லைத்தீவு, ஜூன் 11

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள குமுழமுனை தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில், தமிழ் மக்களின் 15 ➤

## லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் பதவிவிலகல்

கொழும்பு, ஜூன் 11

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத் பதவியில் இருந்து விலகியுள்ளார். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்த 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சாணக்கியனை குறிவைத்தார் ரணில் மன்னிப்புகோரக் காலக்கெடுவும் விதிப்பு

**கொழும்பு, ஜூன் 11**

**நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், தான் வெளியிட்ட கருத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் உடன் மீளப்பெறவேண்டும். அது தொடர்பில் அவர் மன்னிப்பும் கோர வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், விசாரணை மேற்கொள்ள சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற, மே 9 தாக்குதல் வன் முறையின்போது கொல்லப்பட்ட, நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டபோது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கவலை வெளியிட்டனர். அந்தச் சம்பவத்தைக் கண்டித்தனர். புலிகள் மட்டுமே அவரை விமர்சித்தனர். அமரகீர்த்தி அத்துகோரளவுக்கு நடந்த சம்பவத்தையும் இந்த நாடாளுமன்றத்தில் எல்லோரும் கண்டித்தனர்.

ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அதனை செய்யவில்லை.

'20ஆவது திருத்தச்சட்டம் போன்ற, நாட்டுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய சட்டங்களை ஆதரித்ததால்தான் வீடுகள் கொளுத்தப்பட்டன.' என்று மே 20ஆம் திகதி சாணக்கியன் நாடாளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார். மக்கள் ஆணையை காட்டிக்கொடுத்ததால்தான் இந்நிலைமை ஏற்பட்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 'நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்' என அவர் எப்படிக் குறிப்பிட முடியும்?

லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டபோது, புலிகள் மட்டுமே அவரை விமர்சித்தனர். அதனை உள்ளே இருந்துகொண்டு இன்று செய்கின்றனர்.

வீடுகள் எரிக்கப்பட்டதை அவர் (சாணக்கியன்) அனுமதிக்கின்றாரா, படுகொலை செய்யப்பட்டதை அவர் ஏற்கின்றாரா, குமார வெல்கமமீது நடத்தப்பட்ட தாக்குதலை அவர் அனுமதிக்கின்றாரா, அடுத்த நாடாளுமன்ற அமர்வு முடிவடைவதற்குள் இது தொடர்பில் கவலையை வெளியிட்டு, தனது கூற்றை அவர் (சாணக்கியன்) மீளப்பெற வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சபாநாயகரிடம் கேட்டுக்கொள்கின்றேன் -என்றார்.

அப்போது சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர், பிரதமரின் கோரிக்கை, சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வரப்படும் என அறிவித்தார்.

(ஒ-44)

# மே 9 வன்முறைச் சம்பவங்கள் பொதுநலவாய விசாரணை

## கோரிக்கை விடுக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூன் 11

மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில், விசாரணை நடத்துமாறு பொதுநலவாய அமைப்பிடம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையில் கூடியது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணைமீதான விவாதம் இடம்பெற்றது. ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்படி சம்பவத்தைக் கண்டிக்கும் வகையில் கறுப்புப் பட்டி அணிந்தே சபை அமர்வில் பங்கேற்றிருந்தனர். இவ் விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்படி தகவலை வெளியிட்டார்.

'மே 09 சம்பவம் நாடாளுமன்ற கட்டமைப்பு மீது தொடுக்கப்பட்ட தாக்குதலாகும். இது தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த வேண்டியுள்ளது. உள்ளக கட்டமைப்பில் விசாரணை நடத்துவதில் சிக்கல் உள்ளதெனில், வெளியகப் பொறிமுறையை நாடலாம்.

பொதுநலவாய நாடாளுமன்ற அமைப்பின் செயலருக்கு நான் கடிதமொன்றை அனுப்பியுள்ளேன். காலிமுகத்திடல் தாக்குதல் உட்பட அனைத்து சம்பவங்கள் தொடர்பிலும் ஆராயுமாறு கோரியுள்ளேன். எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவை என அறிக்கை முன்வைக்குமாறும் கோரியுள்ளேன். இது தொடர்பில் சபாநாயகரும் கோரிக்கை விடுக்கலாம் - என்று பிரதமர் குறிப்பிட்டார்.

(ஒ-44)

# நயினாதீவு ஆலய மஹோற்சவத்தின் முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 11



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறவுள்ள நிலையில் மஹோற்சவத்தின் முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

திருவிழாவுக்குத் தேவையான பாதுகாப்பு முன்னேற்பாடுகள், படகு, தரைப் போக்குவரத்து, சுகாதார நடைமுறைகள், உணவு, குடிதண்ணீர், மின்சார விநியோகம் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் தொடர்பில் ஆராயப்பட்டு குறித்த தேவைகளுக்குப் பொறுப்பான திணைக்களம் மற்றும் பிரதேசசபையை அதற்குரிய பொறுப்புக்களை ஏற்று முன்னேற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடல் போக்குவரத்து காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இடம்பெறுவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை 12 ஆம் திருவிழாவுக்குப் பின்னர் இரவு 9 மணி வரை கடல், தரைப்போக்குவரத்துச் சேவையை ஈடுபடுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன் விவரங்கள் பொது இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் பொலித்தீன் பாவனை, மது அருந்துதல், மாமிசங்கள் விற்பனை செய்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

படகு போக்குவரத்தில் ஈடுபடுகின்ற படகுகள் தங்களுக்குரிய தகுதிச் சான்றிதழைப் பெற்ற பின்னரே சேவையில் ஈடுபடமுடியும். படகில் பயணிப்பவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு அங்கிகள் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும். முக்கியமாக ஆலயத்துக்கு வரும் அடியவர்கள் தங்களுடைய பெறுமதியான நகைகள், பொருள்களைப் பாதுகாப்பாக பேணவேண்டும். ஏனெனில் தற்போதைய நெருக்கடி நிலையில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. கடல் பயணம் மற்றும் தரைப் பயணங்களின்போது சிறுவர்கள், முதியவர்களுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை அடியவர்கள் தாங்களாகவே முன்னெடுக்க வேண்டும். மேலும் ஆலயத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பொலிஸார் மற்றும் கடற்படையினருடன் இணைந்து முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டச் செயலர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய பரிபாலன சபையினர், கடற்படையினர், பொலிஸார், வேலணைப் பிரதேச செயலர் மற்றும் துறைசார் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ஒ-14,26)

# மடு திருத்தலத்தின் திருவிழா முன்னாயத்த கலந்துரையாடல்

மன்னார், ஜூன் 11

மன்னார் மடு திருத்தலத்தின் திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள நிலையில், திருவிழாவுக்கான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்றுக் காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

கடந்த இரண்டு வருடங்களாக குறைந்தளவு பக்தர்களுடன் இடம்பெற்ற திருவிழாவில் இந்த வருடம் அதிகமான பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் சுகாதாரம், போக்குவரத்து, குடிதண்ணீர், மின்சாரம், பாதுகாப்பு தொடர்பாக உரிய தரப்புடன் கலந்துரையாடப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் மடுத்திருத்தல பகுதிகளில் அதிக எண்ணிக்கையான உணவகங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக சுகாதாரத்துறையினர் மற்றும் நுகர்வோர் அதிகாரசபையினரின் முழுமையான கண்காணிப்புடன் உணவுப் பொருள்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதேசசபையின் அறிக்கையின்படி இந்தமுறை வியாபார நிலையங்களுக்கு வரி அறவிடப்படாது விட்டாலும், ஆவணித் திருவிழாவுக்கு அமைக்கப்படும் கடைகளுக்கு வரி அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே உணவகம் மற்றும் ஏனைய வியாபார நிலையங்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும் திருவிழாவுக்கு வரும் பக்தர்கள் தமது பயணப் பொதிகளைக் கொண்டு வருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கலந்துரையாடலில் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்துநாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14,56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்தவிலையில் எரிவாயு; தாய்லாந்துடன் ஒப்பந்தம்

## பிணைக் கோரிக்கையால் ஒத்திவைப்பு

**கொழும்பு, ஜூன் 11**

**தாய்லாந்துடன் மேற்கொள்ளப்படவிருந்த எரிவாயு கொள்வனவு ஒப்பந்த நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளது என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.**

நாட்டுக்கு குறைந்த விலையில் எரிவாயுவை வழங்க தாய்லாந்து நிறுவனம் ஒன்று பிணையமாக 37.5 மில்லியன் டொலரை கோரியுள்ளது.

தற்போது இலங்கைக்கு எரிவாயுவை விநியோகிக்கும் ஓமான் நிறுவனத்தை விட 9 மில்லியன் டொலருக்கும் குறைவான விலையில் எரிவாயுவை வழங்க அந்த நிறுவனம் விருப்பம் தெரிவித்தது.

இந்த நிறுவனத்துடன் எரிவாயு கொள்வனவு ஒப்பந்தத்தை மேற்கொள்ள கடந்த மே மாதம் அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தது.

எனினும் தாய்லாந்து நிறுவனம் கோரிய நிதியை செலுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக அந்த நிறுவனத்துடனான ஒப்பந்த நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளது என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ச-இ)



கோப்புப்படம்

## ஆர்ப்பாட்டத்தை கலைக்க கண்ணீர்ப்புகை பிரயோகம்

கொழும்பு, ஜூன் 11

பல்கலைக்கழக மாணவர் சம்மேளன உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கப் பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பு, பத்தரமுல்ல பெலவத்தையில் அமைந்துள்ள கல்வி அமைச்சுக்கு முன்பாக பல்கலைக்கழக மாணவர் சம்மேளன உறுப்பினர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில் குறித்த ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கப் பொலிஸார் கண்ணீர்ப் புகைப்பிர யோ கம் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

*எரிவாயுவுக்கான*

## விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்துக

கொழும்பு, ஜூன் 11

எரிவாயுவுக்கான விலைச் சூத்திரத்தை அறிமுகம் செய்ய வேண்டும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் நிறுவனத் தலைவர் பொறியியலாளர் விஜித ஹேரத் தெரிவிக்கையில்;

உலக சந்தையில் ஏற்ற இறக்கமான எரிவாயு விலை மற்றும் டொலரை கருத்திற் கொண்டு விலைச் சூத்திரமொன்று நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

எரிவாயு விலை உயர்வால் ஏற்பட்ட நட்டத்தை நாட்டு மக்களே செலுத்தவேண்டியுள்ளது.

விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்துவதன் மூலம் எரிவாயு விலையில் ஏற்படும் மாற்றங்களை அந்தந்த நுகர்வோர் மட்டுமே ஏற்கவேண்டும் - என்றார். (ச-இ)

## டொலர் விடுவிக்கப்படவில்லை; எரிவாயு தரையிறக்கம் தாமதம்

கொழும்பு, ஜூன் 11

நாட்டுக்கு எரிவாயு ஏற்றிவந்த கப்பலுக்கு நிதி செலுத்தப்படாத காரணத்தால் எரிவாயு சிலிண்டர்களை தரையிறக்கும் நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன என லிட்ரோநிறுவனம்தெரிவித்துள்ளது.

3ஆயிரத்து 900 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பல் ஒன்று கடந்த புதன்கிழமை நாட்டை வந்தடைந்தது.

இந்தநிலையில் கப்பலுக்கான 2.5 மில்லியன் டொலர் நிதி செலுத்தப்படாதமையால் எரிவாயுவை தரையிறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என லிட்ரோ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

(ச-இ)

# பிள்ளைகள் மூன்று நாள்கள் பட்டினி சகிக்க முடியாத தாய் தவறான முடிவு

கொழும்பு, ஜூன் 11

தனது பிள்ளைகள் மூன்று நாள்களாக பட்டினியில் வாடுவதைக் கண்டு, அதனைச் சகித்துக் கொள்ள முடியாத, தாயொருவர் தவறான முடிவு எடுத்து உயிர் மாய்க்க முயற்சித்த பெருந்துயரச் சம்பவமொன்று மொனராகலை மாவட்டத்துக்குட்பட்ட, வெல்லவாய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தற்போது பதுளை மருத்துவமனையில் தாயார் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றார். அவரை காப்பாற்ற முடியும் என்று மருத்துவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

4, 8 மற்றும் 9 வயதுகளில் இவருக்கு மூன்று பெண் பிள்ளைகள் உள்ளனர். குடும்பத் தலைவருக்கு நிரந்தர தொழில் இல்லை. இதனால் சுமார் 3 நாள்களாக நீரை மட்டுமே அருந்தி இவர்கள் நாள்களை, நகர்த்தியுள்ளனர்.

இதனால் பிள்ளைகள் பட்டினியில் தவிப்பதை, தாங்கிக் கொள்ள முடியாத தாய், தவறான முடிவு எடுத்து உயிரை மாய்க்க முயற்சித்துள்ளார்.

நான்கு நாள்களுக்கு முன்னரே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(ஒ-44)




ஒரு விசயம் சரியா, ஒழுங்கா நடந்தால் சிலருக்குப் பொறுக்காது. எப்பிடியாவது அதுக்குள்ள மூக்கை நுழைச்சு, குழப்பியடிச்சுப் போட்டுத்தான் மற்ற வேலை பாப்பினம். அப்பிடியான சிலர் இப்பவும் எங்களுக்குள்ள இருக்கினம்.

நாடு முழுக்க காஸூக்கும், பெற்றோலுக்கும், மண்ணெண்ணெய்க்கும், பால்மாவுக்கும், அரிசிக்கும் இன்னும் தட்டுப்பாடு குறையேலை. ஆனால் ஒரு சிலிண்டர் காஸையோ, ஒரு துளி பெற்றோலையோ, ஒரு சிறங்கை அரிசியையோ எங்கட சனத்துக்கு கொண்டு வந்து சேர்க்கிறதுக்கு தமிழ் அரசியல்வாதியள் ஒருத்தரும் எந்த நடவடிக்கையும் எடுக்கேலை. ஆனால் எல்லாரும் மறக்காமல் அறிக்கை மட்டும் விட்டவை. கூட்டமைப்புக்காரருக்கும், முன்னணிக்காரருக்கும், விக்கியருக்கும் அரசாங்கத்தில செல்வாக்கு இல்லை. ஏனெண்டால் அவை அரச எதிர்ப்புத்தானே. ஆனால் அரசாங்கத்தில அமைச்சரா இருக்கிறவரும், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரா இருக்கிற கனவுக்கார எம்.பியும் கூட சனத்தின்ர கஷ்டத்தைப் போக்க ஒரு துரும்பைக் கூட கிள்ளிப்போடேலை.

நிலைமை இப்பிடியிருக்க, அதிகாரிமார்தான் ஓடுப்பட்டு திரிஞ்சு, கொழும்புக்கு புள்ளிவிவரங்கள் எல்லாம் அனுப்பி, அவையின்ர புண்ணியத்தில தான் இப்ப கொஞ்சமெண்டாலும், கட்டம் கட்டமா உந்த எரிபொருள், காஸ், பால்மா, அரிசி எல்லாம் கிடைக்கத் தொடங்கியிருக்கு. அது இப்ப கனவுக்கார எம்.பிக்கு கடும் புகைச்சல். 'அதெப்பிடி நான் செய்யாமல் இவை செய்ய ஏலும்?'எண்டு தன்ர அல்லக்கையளிட்ட பொருமியிருக்கிறார். அவையும் 'அண்ணை எல்லாம் நீங்கள் விட்ட இடம். அவைக்கு முந்தின பயம் இல்லாமல் போட்டுது. பழைய பன்னீர்ச்செல்வமா அவையை ஆட்டி வைச்சால் தான் உங்களை மதிப்பினம்' எண்டு உசுப்பேத்தியிருக்கினம் போல. உடனேயே கனவுக்கார எம்.பியும் ஒரு கடிதத்தைக் கச்சேரிப் பெரியவருக்கு எழுதியிருக்கிறார்.

அதில ' வீட்டுத்திட்டம், விவசாயம், வீட்டுத்தோட்டம், சமுர்த்தி, உணவு, எரிபொருள், சமையல் எரிவாயு, நிவாரணம்' எண்ட விசயங்கள் சம்பந்தமான எல்லாத் தரவுகளையும் தன்ர ஒப்பீஸூக்கும் அனுப்போணும் எண்டு ஓர்டர் போட்டிருக்கிறார். நாடு கிடக்கிற கிடையில ஏதோ அதிகாரிமார் கஷ்டப்பட்டு, திட்டம் போட்டு, எல்லாச் சனத்துக்கும் எல்லாம் கிடைக்கிற வகையில ஒரு சிஸ்டத்தை நடைமுறைப்படுத்தேக்க, அதைப் பற்றி தனக்கும் தகவல் தர வேணுமெண்டு கேக்கிறதால, இன்னும் அதிகாரிமாரின்ர நேரம் தான் வீணாப் போகப் போகுது. இவருக்கு உந்த தகவல்களை தயார் செய்யிற நேரத்துக்கு அதிகாரிமார் பிரயோசனமான வேறஏதும் அலுவல் பாத்திடுவினம். கனவுக்கார எம்.பியும் உந்தத் தகவல்களை வாங்கி என்ன செய்யப்போறார்? எங்க இனிமேல் காஸ், பெற்றோல், நிவாரணம் குடுபடப் போகுது எண்டு அறிஞ்சிட்டு, அங்க முதலே போய் நிண்டு கொண்டு 'உதெல்லாம் நான் தான் அங்க அடிபட்டு உங்களுக்காக கொண்டு வந்தனான்' எண்டு திரும்பவும் ஒருக்கா ஓசித் தேங்காயை மூசி மூசி, ஏசிப் பிள்ளையாருக்கு அடிக்கப் போறார். அதோட தன்ர ஆக்களுக்கு முன்னுரிமையில குடுக்கச் சொல்லவும் கூடும். வழக்கமா அவர் அப்பிடித்தான் செய்யிறவர். இப்பிடி இவர் மூக்கை நுழைச்சால், அமைச்சரா இருக்கிறவரும் ஏட்டிக்கு போட்டியா தலையை விடுவார். பிறகென்ன, இவை ரண்டு பேரின்ர ஈகோச் சண்டையால சனத்துக்கு போகவேண்டிய உதவிகள், பொருள்கள், நிவாரணம் எல்லாம் இழுபட்டு, நாசமாப் போக வேண்டியதுதான். உங்களால ஒண்டும் செய்ய முடியேலை எண்டால், ஒதுங்கிப் போக வேண்டியதுதானே? எதுக்கு சும்மா எல்லாத்துக்கையும் மூக்கை நுழைச்சு, விலாசம் காட்ட நினைக்கிறியள்? கொழும்பில எம்.பிமாருக்கு நடந்ததெல்லாம் பார்த்தும் கூட, இவைக்கு அறிவு வரேலையே? ஆர் கண்டது, பேர வாவி மாதிரி ஆரிய குளத்துக்கையும் அரசியல் குப்பையளைச் சனம் கொட்டினாத்தான் உவைக்கு புத்தி வரும் போல.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனுக்கு எரிபொருள் பெறமுடியாத நிலை!

## காஞ்சன விஜேசேகர கவலை

கொழும்பு, ஜூன் 11

இலங்கை ஏனைய நாடுகளிடமிருந்து கடனுக்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமையில் உள்ளது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் உரை யாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் எந்தத் தரப்பினரிடமும் கடனுக்கு எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை தோன்றியுள்ளது. இதனால் நாடு மீண்டும் மீண்டும் கடன்பொறிக்குள்ளே தள்ளப்படும். இதன்காரணமாக பணத்தைக் கொடுத்தே எரிபொருளைக் கொள்வனவு செய்ய நேரிட்டுள்ளது.

இம்மாதத்துக்கு மாத்திரம் சுமார் 500 மில்லியன் டொலர் தேவை என மதிப்பிடப்பட்டது. இலங்கை ரூபாவின் பெறுமதியில் இந்தத் தொகை 203 பில்லியன் ரூபா.

ரஷ்யாவிடம் இருந்து ஏன் குறைந்த விலைக்கு எரிபொருளை கொள்வனவு செய்யவில்லை என பல தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். அனைத்து நிறுவனங்களுக்கும் எம்மால் முடிந்த நிபந்தனைகள் மற்றும் யோசனைகளை அறிவித்துள்ளோம்.

தகுதியான விநியோகஸ்தர்களுடன் உடன்படிக்கை செய்து விநியோகத்தைத் தொடர்ந்தும் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் -என்றார். (ச-இ)

# கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 11

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் "தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் உயர்தர சான்றிதழ்" கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தளத்தில் பெற்று எதிர்வரும் ஜூலை மாதம் 8 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலும் உதவிப்பணிப்பாளர், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாகவோ அல்லது உதவிப்பணிப்பாளர் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், மன்னார் கற்கை நிலையம், ஆர்.டி.எஸ்.கட்டடம், சிறிய குருமட வீதி, சாவற்கட்டு எனும் முகவரிமுகவரியூடாகவோ தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும். (ஒ-14)

# கடன் தவணை, குத்தகை செலுத்துதல் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 11

நாட்டின் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள மக்களின் நிலைமையைக் கருத்திற் கொண்டு கடன்தவணை செலுத்துவது நேற்றுமுதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது என குத்தகை மற்றும் கடன்செலுத்துவோர் ஒன்றிணைந்த சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்க பொதுச்செயலாளர் அசங்க ருவன் பொதுப்பிட்டிய தெரிவித்தாவது:

ஐந்து விடயங்களை முன்வைத்து குத்தகை நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கான உடன்பாடு எட்டப்படும்வரை இந்தக் கொடுப்பனவுகள் நிறுத்தப்படும். குத்தகை மற்றும் கடன் தவணையின் கீழ் பெறப்பட்ட வாகனங்களைக் கொண்டு பல்வேறு தொழில்களை மேற்கொள்கின்ற 2 லட்சத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் எமது சங்கத்தில் உள்ளனர்.

தற்போதைய எரிபொருள் விலை அதிகரிப்பால் குத்தகை அல்லது கடனைச் செலுத்த முடியாத நிலை அவர்களிடம் காணப்படுகிறது. இதனைக் கருத்திற்கொண்டே கடன் தவணை செலுத்துவது இடைநிறுத்தம் செய்யப்படுகின்றது-என்றார். (ச-இ)

# அமைச்சுக்களில் மாற்றம் வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜூன் 11

அமைச்சுக்களின் விடயதானங்கள் மற்றும் பொறுப்புக்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 27 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2281/41 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலில் மாற்றம் செய்யப்பட்டு நேற்று முதல் நடைமுறையாகும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு மற்றும் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு ஆகியன உருவாக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, பாதுகாப்பு அமைச்சின்கீழ் காணப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் நிறுவனம், டெலிக்கொம் நிறுவனம் ஆகியன தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. (ச-இ)



இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற அதிகாரியும் யாழ்.இந்துவின் பழைய மாணவருமான க.கை. விக்னேஸ்வரன் யாழ்.மேல் நீதிபதி முன்னிலையில் கடந்த மே 26ஆம் திகதி அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (ச)

# நாணய நிதியத்தின் குழு 20 இல் நாட்டுக்கு பயணம்

கொழும்பு, ஜூன் 11

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதி ஏற்பாடு தொடர்பான மேலதிக கலந்துரையாடல்களுக்காகவும் அதிகாரிகள் மட்ட இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கிலும் இந்த பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

எனினும், சர்வதேச நாணய நிதியம் நிதியளிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு முன்னர் கடன் நிலைத்தன்மையை மீட்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது. (ஒ-14-இ)

# கொல்லங்கலட்டியில் பசுமை அறிவொளி நிகழ்வு

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி தெல்லிப்பழை கொல்லங்கலட்டியில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

மாணவர்களிடையே சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை சூழல் பாதுகாப்பில் ஈடுபடுத்தும் நோக்கோடும் அவர்களின் கல்வி வளர்ச்சி மற்றும் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் நோக்கோடும் இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

இதன்போது கலந்துகொண்ட மாணவர்களுக்கு மரநடுகை மேற்கோள்கள் அடங்கிய அப்பியாசக்கொப்பிகள் வழங்கப் பட்டன. (ஒ-14)



# மஹிந்தவுக்கு எதிரான மனு ஜூலை 4இல் விசாரணைக்கு

கொழும்பு, ஜூன் 11

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்டோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் ஜூலை 4ஆம் திகதிக்கு அழைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அரசாங்கத்தின் திறமையற்ற பொருளாதார முகாமைத்துவம் மற்றும் நாட்டில் தற்போது பொருளாதார நெருக்கடி மற்றும் தாங்க முடியாத பண வீக்கத்தை உருவாக்கும் விவேகமற்ற முடிவுகளால் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக நேற்று தாக்கல் செய்யப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கலாநிதி மஹீம் மெண்டிஸ் உட்பட திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மூவரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, உயர் நீதிமன்ற நீதியரசர்களான [illegible] பிரியந்த ஜய [illegible] கொ. மற்றும் எல். டி. பி. தெஹிதெனிய ஆகிய ஐவரடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டது.

முன்னாள் பிரதமர் தவிர, முன்னாள் நிதி அமைச்சர்களான பஸில் ராஜபக்ச, அலி சப்ரி, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் 39 பேர் பிரதிவாதிகளாக மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளனர். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடகை வாகனங்களைத் திருப்பிக் கொடுக்காதவர்கள் கைது



கொழும்பு, ஜூன் 11

கிளிநொச்சிப் பிரதேசத்தில் வாகனங்களை வாடகைக்கு எடுத்து திருப்பிக் கொடுக்காத சந்தேகநபர்கள் மூவர் கேகாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கேகாலை விசேட குற்றத்தடுப்புப் பிரிவு மற்றும் மத்துகம விசேட குற்றத்தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் 5 கார்கள், 2 வான்கள் மற்றும் ஜீப் ஒன்றும் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14,இ)

# சமுர்த்திப்பயனாளிகளை மீளாய்வு செய்வது அவசியம்

## அதிகவருமானம் பெறுவோரும் உள்ளீர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

**யாழ். மாவட்டத்தில் சமுர்த்திப் பயனாளிகள் பட்டியலை உடனடியாக மீளாய்வுக்குட்படுத்தி அதிக வறுமைக்கோட்டுக்குள், காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ள குடும்பங்களை சமுர்த்திப் பயனாளிகளாக உள்வாங்குமாறு யாழ். மாவட்டச் செயலருக்கு வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினர் ந.பொன்ராசா கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பான கோரிக்கைக் கடிதத்தை நேற்றுக்காலை யாழ். மாவட்டச் செயலருக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:-

நாட்டில் வறுமை ஒழிப்புத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 78 ஆயிரத்து 441 குடும்பங்கள் சமுர்த்திப் பயனாளிகளாக உள்ளீர்க்கப்பட்டு அவர்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் மற்றும் நலத்திட்டங்கள் வழங்கப்படுகின்றன. குறித்த குடும்பங்களில் ஆயிரக்கணக்கானோர் சமுர்த்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, ஏறக்குறைய 15 வருடங்களாக சமுர்த்திப் பயனாளிகளாக உள்ளனர்.

சமுர்த்திக் குடும்பங்களில் ஏராளமானோர் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துவதைக் காட்டிலும் உயர் வருமானம் பெறும் குடும்பங்களாவர்.

நூற்றுக்கணக்கானோர் கூலியாள்களை வைத்து தொழில்களை நடத்தும் முதலாளிகளாவர். பல்லாயிரக்கணக்கானோர் வாகனங்களை வைத்து தினசரி வருமானத்தை ஈட்டுபவர்களாவர். இந்த நிலையில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிகள், கூலித்தொழில் செய்யும் குடும்பங்கள் சமுர்த்திக் கொடுப்பனவுகள் இன்றி காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தற்போதைய நிலையின்படி கூறப்போனால், எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் தேடிச்சென்று தமது வாகனங்களுக்கு எரிபொருளைப் பெற்றுவந்து வீடுகளில் கான்கணக்காக சேமித்து வைப்பவர்களும், அத்தியாவசியப் பொருள்களை வீடுகளில் பதுக்கி வைத்திருப்பவர்களும் சமுர்த்திப் பயனாளிகளாக இருக்கின்ற அதே நேரம், தினமும் ஒரு இறாத்தல் பாண் வாங்கவே கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ள குடும்பங்கள் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறான பெரிய வேறுபாடுகளுக்கு மத்தியில்தான் யாழ். மாவட்ட அரச நிர்வாகம் மக்களுக்கான பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கின்றது என்பது வேதனையான விடயம். இந்தத் தகவல்கள் அதிகாரிகளுக்கு தெரிந்திருந்தும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது அதைவிட வேதனையானது. அண்மையில் யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர், பொது வெளியில் கருத்துக் கூறும்போது, 'யாழ்.பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வின்படி சமுர்த்தி பெறும் 70 வீதமான குடும்பங்கள் உயர் வருமானம் பெறுபவர்கள்" என்று வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார். இவ்வாறான குடும்பங்களுக்கு தொடர்ந்தும் சமுர்த்தித் திட்டங்கள் சென்றுகொண்டிருப்பதை யாழ். மாவட்ட அரச நிர்வாகம் பார்த்துக்கொண்டிருப்பது அப்பாவிகளுக்கு இழைக்கும் அநீதியாகும்.

எனவே, யாழ்.மாவட்ட சமுர்த்திப் பயனாளிகள் உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு மாவட்டத்துக்கு என பொதுவான கொள்கையின்படி அரசியல் தலையீடுகள் ஏதுமின்றி சமுர்த்திப் பயனாளிகள் தெரிவு இடம்பெறவேண்டும். அந்த வகையில் வீடுகளில் உழைக்கும் வயதுடைய நபர்கள், வீடுகளில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை, தொழில்களின் நிலைமை, குடும்ப வருமானம், குடும்பத் தலைவர் அல்லது குடும்ப அங்கத்தவர்களின் நோய் நிலைமை, விதவைகள், கைவிடப்பட்டோர், சிறப்புத்தேவையுடையோர், போரில் பாதிக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் தெரிவு செய்து சமுர்த்திப் பயனாளிகளாக உள்வாங்குங்கள் - என்றுள்ளது. (ஒ-14)



# சுதந்திரபுரம் படுகொலையின் 24 ஆவது ஆண்டு நினைவேந்தல்

முல்லைத்தீவு, ஜூன் 11

புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் படுகொலையின் 24 ஆவது ஆண்டு நினைவேந்தல் சுதந்திரபுர சந்தியில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது சுதந்திரபுரத்தில் நிகழ்ந்த வான்படைத் தாக்குதலில் பிள்ளைகளைப் பறிகொடுத்த தந்தை ஒருவரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. அத்துடன் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் பொதுமக்கள், சமூக ஆர்வலர்களால் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. இதேவேளை அஞ்சலி நிகழ்வு இடம்பெற்ற பகுதியில் அதிகளவான புலனாய்வுப் பிரிவினர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,113)

# போதிய மாற்று மருந்து கையிருப்பில் உள்ளது

## அச்சம் வேண்டாம் என சுகாதாரப் பிரிவு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11

நாட்டில் அத்தியாவசிய மருந்து வகைகளின் கையிருப்பு பற்றாக்குறை நிலவுகின்ற போதிலும் அவற்றுக்கான மாற்றுமருந்துகள் போதியளவில் கையிருப்பில் உள்ளன.

இதுகுறித்து பொதுமக்கள் வீணாக அச்சமடையத் தேவையில்லை. இவ்வாறு கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இலங்கை மருத்துவர் சங்கத்தின் உபதலைவரும் விசேட மருத்துவ நிபுணருமான சுரந்த பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் அத்தியாவசிய மருந்து வகைகளின் கையிருப்பு குறைவாக காணப்படுகின்ற போதிலும், அவற்றுக்கான மாற்று மருந்துகள் போதியளவு கையிருப்பில் உள்ளன.

மக்கள் வீணாக அச்சமடைந்து மருத்துவரின் ஆலோசனைகளைப் பெறாமல் அத்தியாவசிய மருந்துகளை மருந்தகங்களில் கொள்வனவு செய்வதைத் தவிருங்கள்.

மருந்துகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு சரியான வெப்பநிலை தேவை என்பதுடன், எதிர்காலத்தில் உங்களுக்கான மருந்துகள் மாறவும் கூடும்.

ஆகவே, மருந்துகளை அளவுக்கதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

அத்துடன் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்த நோய்களை உடையவர்கள் கட்டாயமாக பரிசோதனை செய்து அதற்கான மருந்துகளை தவறாது உட்கொள்ளவதன் மூலமே நோய்த் தாக்கத்திலிருந்து தப்பமுடியும்.

மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டாலும், அவற்றுக்கான மாற்று மருந்துகள் எம்மிடம் உண்டு. மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பெறாமல் எந்தவொரு மருந்தையும் உட்கொள்வதை கட்டாயம் தவிருங்கள் என்றார். (ஒ-இ)

# தமிழக உதவிப் பொருள்கள் தென்மராட்சியில் வழங்கல்

தமிழகத்தால் வழங்கப்பட்ட உதவிப் பொருள்களில், இரண்டாம் கட்டமாக அரிசிப் பொதிகள் தென்மராட்சிப் பிரதேச கிராம அலுவலர் பிரிவுகளில் நேற்று வழங்கப்பட்டன.

பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்டு ஏற்கனவே வழங்கப்படாத 6 ஆயிரத்து 565 குடும்பங்களுக்கு அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன. ஏற்கனவே பிரதேசத்தைச் சேர்ந்த 5 ஆயிரம் குடும்பங்களுக்கு தமிழக அரசின் உதவிப் பொருள்களான அரிசி, கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு பால்மா என்பன வழங்கப்பட்ட போதிலும் இந்த முறை அரிசிப்பொதி மட்டும் வழங்கப்பட்டது. (ஒ-14,9)

# உதவிப்பொருள்கள் வழங்குதலில் குறைபாடிருந்தால் முறையிடவும்

சாவகச்சேரி, ஜூன் 11

தென்மராட்சிப் பிரதேசத்தில் வழங்கப்பட்டு வரும் தமிழக உதவிப் பொருள்கள் மற்றும் மண்ணெண்ணெய் விநியோகம் போன்றவற்றில் குறைபாடு இருந்தால் உடனடியாக பிரதேசத்திலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அல்லது பிரதேச செயலருக்கு முறையிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நேரடியாக வந்து கையளிக்க முடியாதவர்கள் பிரதேச செயலகத்தில் உள்ள முறைப்பாடுப் பெட்டியிலும் எழுத்து மூலமாக முறைப்பாடு செய்ய முடியாதவர்கள் நேரடியாகவும் முறைப்பாட்டைத் தெரிவிக்கலாம். இதற்கமைய முறைப்பாடுகள் கிடைப்பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்களைப் புறந்தள்ளியமையே நாடு படுகுழியில் விழக் காரணம்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11

**மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள், தமிழ் மக்களைப் புறந்தள்ளி ஆட்சி நடத்தியமையால்தான் நாடு இன்று முன்னேறாமல் படுகுழியில் வீழ்ந்துள்ளது. இதைத் தற்போதைய அரசு கவனத்திற்கொண்டு செயற்பட வேண்டும். -இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீன உறுப்பினராகச் செயற்படும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் 43ஆம் படையணியின் தலைவருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு நான் ஆதரவு வழங்க மாட்டேன். அதேவேளை, இந்த அரசை வீழ்த்தும் சதி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கவும் மாட்டேன்.

நாடாளுமன்றில் நான் தொடர்ந்தும் சுயாதீன உறுப்பினராகவே இருப்பேன். ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளில் அதிருப்தி இருந்தமையால்தான் நான் அதிலிருந்து விலகி சுயாதீன உறுப்பினராகச் செயற்படுகின்றேன்.

மக்களின் நன்மை கருதி அரசு முன்னெடுக்கும் செயற்றிட்டங்களுக்கு மாத்திரம் வெளியில் இருந்து ஆதரவு வழங்குவேன். எனது எதிர்கால இலக்கு தொடர்பில் இப்போது நான் சொல்லமாட்டேன். தமிழ் மக்களையும் அரவணைத்துக்கொண்டே நான் பயணிப்பேன். மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள், தமிழ் மக்களைப் புறந்தள்ளி ஆட்சி நடத்தியமையால்தான் நாடு இன்று முன்னேறாமல் படுகுழியில் வீழ்ந்துள்ளது. இதைத் தற்போதைய அரசு கவனத்திற்கொண்டு செயற்பட வேண்டும் -என்றார். (ஒ-22)

## ரயில்வேக்குச் சொந்தமான காணிகளிலும் பயிர்ச்செய்கை

### ஜனாதிபதியுடனான கூட்டத்தில் அமைச்சர் பந்துல தெரிவிப்பு

ரயில் திணைக்களத்துக்குச் சொந்தமான ஒதுக்கப்பட்ட நிலங்களை ஓராண்டுக்கு உணவுப் பயிர்ச் செய்கைக்கு குத்தகைக்கு விட திட்டமிடப்பட்டுள்ளது. பிரதேச செயலகங்கள் மூலம் விவசாய சங்கங்களுக்கு குறித்த காணிகளை மிகக்குறைந்த வரிவிகிதத்தில் வழங்க திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கூட்டத்தின்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எரிபொருள் விலை உயர்வால் மக்கள் கடும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். அதேவேளை, பொதுப்போக்குவரத்துக்கு அதிக தேவை இருப்பதால், அதற்கு வசதிகளை வழங்குவதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்துகளுக்கு தற்போது நடைமுறையில் உள்ள ஒன்றிணைந்த நேர அட்டவணை முறையை குறுகிய பயண சேவைகளுக்கும் பயன்படுத்த முன்மொழியப்பட்டது.

அலுவலக சேவைகளை இலக்காகக் கொண்டு புதிய ரயில் சேவைகளை தொடங்கவும் தற்போது இயக்கப்படும் ரயில்களுக்கான பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கை போக்குவரத்துசபை ஊழியர்களின் சம்பள பிரச்சினைக்குத் தீர்வுகாண இணக்கம் காணப்பட்டதுடன், அதற்கான அமைச்சரவை பத்திரத்தை விரைவில் சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது -என்றுள்ளது. (ஒ-இ)



## கடவுச்சீட்டுக்கு படம் பிடிப்பதற்கு பத்தரமுல்லைக்குச் செல்லுங்கள்

கொழும்பு, ஜூன் 11

வெளிநாடு செல்ல எதிர்பார்க்கும் அனைவரும், கடவுச்சீட்டுப் படங்களைப் பிடிப்பதற்கு, பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துக்கு செல்லுமாறு படப்பிடிப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ரணில் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்காக பிடிக்கப்படும் படங்களை, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துக்கு இணையத்தள முறைமையில் அனுப்புவதற்கான மென்பொருள் முழுமையாக செயலிழந்துள்ளது. இதனாலேயே பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துக்கு செல்லுமாறு அவர் தெரிவித்தார். (ஒ-14-இ)

## இறக்குமதியாகும் பொருள்களை விடுவிக்க துரித நடவடிக்கை

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜூன் 11

தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருள்களை தாமதமின்றி விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நவீன தொழிநுட்பத்தினூடாக வினைத்திறனான சேவையை வழங்கி இலங்கை துறைமுகங்கள் மீதான சர்வதேச நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். கொழும்பு துறைமுகமானது உலகின் அனைத்து முன்னணி கப்பல் நிறுவனங்களுடனும் இயங்குகிறது. நிர்வாக சபை உட்பட முழு ஊழியர்களும் பொறுப்புடன் செயற்பட்டு அதனைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சட்டத்தை மீறி செய்யப்படும் இறக்குமதிகளால் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஏலம் விடுவதில் முறைகேடுகள் நடப்பதாக தெரியவந்துள்ளது. சதொச மற்றும் கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம் போன்ற அரச நிறுவனங்களால் அத்தகைய பொருள்களை விற்பனை செய்வதன் மூலம் ஊழல் மோசடிகளை தடுக்க முடியும் எனவும் அரசாங்கத்துக்கு வருமானத்தை ஈட்ட முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை இலக்காகக் கொண்டு துறைமுகத்தின் இளம் ஊழியர்களுக்கான பயிற்சிப் பிரிவை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தினதும் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தினதும் நிர்மாணிப் பணிகளில் நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து, குறித்த காலத்திற்குள் வேலைத்திட்டத்தை நிறைவு செய்வதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சிக்கலுக்குள்ளான ரஷ்ய ஏரோப்ளோட் விமான நிறுவனத்துடன் புரிந்துணர்வுடன் செயற்பட்டமை காரணமாக நிலைமையை ஒரு வெற்றிகரமான முடிவுக்கு கொண்டு வர முடியும் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர். இவ்வாறான சம்பவங்களை கையாள்வதில் நாடு மற்றும் இராஜதந்திர உறவுகள் தொடர்பில் வலுவான புரிதலுடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார். (ஒ-இ)

## சிரிக்கும் விடயமல்ல நாட்டின் எதிர்காலம்

### பஸில் உரைக்கு ஜயசூர்ய அதிருப்தி

நாட்டின் தற்போதைய நிலைமை சிரிக்கும் விடயமல்ல. நாட்டின் எதிர்காலத்தை பாழாக்கிவிட்டீர்கள். முதலில் உங்கள் அரசியல் நாடகங்களை நிறுத்திக்கொள்ளுங்கள்.

இவ்வாறு முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவின் விசேட செய்தியாளர் சந்திப்புக் குறித்து இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜயசூர்ய கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் உரையாற்றிய பஸில் ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலக தீர்மானித்துள்ளேன். அரசமைப்பின் உத்தேச 21 ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் முடிவுக்கு என்னால் உடன்படமுடியாது. அதனால்தான் முன்கூட்டியே பதவி விலகுகிறேன் என்று கருத்துத் தெரிவித்தார்.

இந்த நிலையில், இந்த ஊடக சந்திப்பு குறித்து ருவிற்றரில் பதிவிட்டுள்ள இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜயசூர்ய, முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பால் நான் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளேன். இது சிரிக்கும் விடயம் அல்ல. எங்கள் நாட்டின் எதிர்காலம் பாழாகிவிட்டது. நீங்கள் அதனை பொறுப்பேற்கவில்லை. இந்த அரசியல் நாடகங்களை நிறுத்துங்கள் எனப் பதிவிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணாடியே கதைகேள் !

'காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கொலையில் ஈடுபட்டவர்கள். அவர்களை அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் என்று சொல்லமுடியாது. காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களின் கரங்களில் குருதிக் கறை படிந்துள்ளது' என்று நாடாளுமன்றத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்திருக்கின்றார் முன்னாள் பிரதமரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ச.

நாட்டின் தற்காலப்போக்குக்கு கொஞ்சமும் உதவாத- முற்றிலும் முரண் சிந்தனையுடைய - மீண்டும் ஒரு தீவிரமான போராட்டத்தையோ அல்லது கலவரத்தையோ ஏற்படுத்தக்கூடிய அடிமட்டமான முட்டாள்தனக் கருத்தை, நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி அவ்வளவு இலகுவாகத் தூக்கிப்போட்டிருக்கின்றார் அவர்.

ராஜபக்சக்கள் கூண்டோடு பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி, காலிமுகத்திடலில் மிக அமைதியாகவே ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. போராட்டம் எத்தனையோ நாள்களைக் கடந்த பின்னரும் அது தன் நிலையில் இருந்து கொஞ்சமும் தளம்பவில்லை. இதை உலகம் நன்கறியும். அவ்வாறு ஜனநாயக மரபுகளுக்கு அமைய நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 'குளவிக்கூட்டுக்குக் கல்லெறிந்த' செயலைச் செய்தவர் மஹிந்தவே.

நாட்டு மக்களிடத்தில் மட்டுமல்ல, பெரமுனவுக்குள் எழுந்த உள்வீட்டுக் குழப்பத்தை அடுத்து பதவி விலக வேண்டிய கட்டாயத்துக்கு மஹிந்த தள்ளப்பட்டார். ஆனால், பதவியை இலகுவாக ஒப்படைத்து விடுவதற்கு, மஹிந்தவுக்கு இம்மியும் விருப்பமில்லாத நிலையில், அலரி மாளிகையில் கூட்டமொன்றை அவர் ஏற்பாடு செய்தார். மிக இலகுவில் உணர்ச்சிவசப்படக்கூடிய பெரமுனவின் அடித்தட்டுத் தொண்டர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்கள் அங்கு மிகச்சாதுரியமாக உருவேற்றப்பட்டனர். எதற்காக மஹிந்த அந்தக் குழுவை மேற்படி கலந்துரையாடலுக்கு அழைத்தாரோ அது கச்சிதமாகவே நிறைவேறியது. அலரிமாளிகையில் உருவேற்றப்பட்டவர்கள் காலிமுகத்திடலில் அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தமது ஆவேசத்தைக் கொட்டித் தீர்த்தனர். அவர்களின் கூடாரங்களை கிழித்தெறிந்தனர். இத்துடன் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முடிந்துவிடும் என்றுதான் மஹிந்த எண்ணினார். தனது பதவி விலகலை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற மாய விம்பத்தை உருவாக்க அவர் எத்தனித்திருக்கலாம். ஆனால், அதற்குப் பிறகு நடந்ததுதான் இலங்கையின் வரலாற்றில் இதுவரை இடம்பெறாத - மஹிந்த கனவிலும் நினைத்திராத தரமான, சிறப்பான சம்பவங்கள்.

எந்தவொரு தாக்கத்துக்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் இருக்கவே செய்யும். அப்படியிருக்கையில் இலகுவில் கிளர்ந்தெழக்கூடிய 'குளவிக்கூட்டம் போன்ற' இளைஞர்களை வம்பிழுத்தால் அவர்கள் விடுவார்களா? தம் மீதான தாக்குதலுக்குப் பதிலடி கொடுப்பதற்கு காலிமுகத்திடலில் போராட்டம் நடத்திய இளைஞர்கள் வெகுண்டெழுந்தனர். ராஜபக்சக்களின் பூர்வீகச் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன. அரச ஆதரவு எம்.பிக்களின் வீடுகளும் பற்றியெரிந்தன. துரதிர்ஷ்டவசமாக நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள பொதுமக்களால் கொல்லப்பட்டார். ஆனால், இதற்கெல்லாம் முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டியவர் மஹிந்த ராஜபக்சவே. அவரின் தொலைநோக்கற்ற, ஜனநாயகப் பிறழ்வான எண்ணமே இத்தனையையும் விதைத்து அறுவடையும் செய்தது.

மே 9 இரவு ஒட்டுமொத்த நாடும் வேட்டைக்காடாக மாறிக்கொண்டிருந்தபோது கடற்படையினரின் பாதுகாப்பில் திருகோணமலை கடற்படை முகாமில் தஞ்சமடைந்திருந்த மஹிந்த, இளைஞர்களின் கோபாவேசம் 'ஆறின கதை'யாகிய பின்னர் நேற்று நாடாளுமன்றத்தில், வேண்டத்தகாத சொற்களை தேவைக்கும் அதிகமாகவே பயன்படுத்தியிருக்கின்றார்.

ஜனநாயகத்தை மதிக்காத நபர்களின்- மஹிந்தவின் ஆதரவுக் காடையர்களின்- கரங்களில் குருதிக்கறை படிந்துள்ளதுதான். ஆனால், அதைச் சொல்ல வேண்டிய நபர் மஹிந்த அல்லர். அவ்வாறு இந்தக் கருத்துக்களை அவர் சொல்லத்தான் போகின்றாரெனில் சொல்லவேண்டிய இடம் நாடாளுமன்றம் அல்ல. நல்ல தெளிவான கண்ணாடி [illegible] இருக்கும் இடத்துக்கு நேரெதிரே போய்நின்று தன்னைத் தானே பார்த்தவாறு அவர் சொல்லிக் கொள்ளட்டும்.

## நாளொரு நல்வார்த்தை

"எதற்கும் அஞ்சாதே; எதையும் வெறுக்காதே; யாரையும் ஒதுக்காதே; உன் பணியை ஊக்கத்துடன் செய்" - அரவிந்தர்




# 45 எம்.பிக்கள் படுகொலை அவர்களில் 24 பேர் தமிழர்கள்

**கொழும்பு, ஜுன் 11**



**இலங்கையில் 1956ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 45 நாடாளுமன்ற உறுப்பினர்கள் படு கொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 24பேர் தமிழர்கள் என்று பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற, மே 9 தாக்குதல் வன்முறையின்போது கொல்லப்பட்ட, நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1956 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம், பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்டார். இதுவே முதலாவது படுகொலையாகும். அன்றிலிருந்து இது வரை, நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கையில், 45 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

படுகொலைப் பட்டியலில் இரு அரச தலைவர்கள் உள்ளனர். எதிர்க்கட்சி தலைவர் ஒருவரும் உள்ளடங்குகின்றார். 1956 இல் இருந்து ஆராய்ந்தால், 19 மாதங்களுக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வீதம் கொல்லப்பட்டுள்ளனர். தனிப்பட்ட பிரச்சினையால் அல்ல. அவர்கள் வகித்த அரசியல் நிலைப்பாட்டால் தான் கொல்லப்பட்டுள்ளனர். இந்த 45 பேரில், 24 பேர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் - என்றார்.

(ஒ-44)

# கடன் விண்ணப்பங்கள் அதிகளவில் நிராகரிப்பு

## மத்திய வங்கி ஆய்வில் கண்டறிவு

கொழும்பு, ஜுன் 11

இலங்கையில் கடந்த 2021ஆம் ஆண்டு இறுதிக் காலாண்டுடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் வங்கிகளால் நிராகரிக்கப்பட்ட கடன்விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகளவாகப் பதிவாகியுள்ளது.

மத்திய வங்கியால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கடன் ஆய்வில் இது தெரிய வந்துள்ளது.

மக்களின் வருமானத்துக்கு தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளது. இதனால் வாடிக்கையாளர்களால் தங்கள் கடன்களை மீள செலுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. இதன் காரணமாக வங்கிகள் கடன் விண்ணப்பங்களை அதிகளவில் நிராகரிக்கின்றன.

இவ்வாறு நிராகரிக்கப்படும் கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

(ச-இ)

**நாளை** 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை வைகாசி 29

சுபநேரம் : 08.52 - 10.22
ராகுகாலம்: 04.22 -05.52
பிரதோஷ விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















# மீண்டும் அழிவில் அமேசான்

உலகின் நுரையீரல் என்று வர்ணிக்கப்படும் அமேசான் காடுகள் கடந்த சில வருடங்களாகவே அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும், கடந்த இரு மாதங்கள் அங்கு உச்சக் காடழிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று எச்சரித்திருக்கின்றன சர்வதேச ஊடகங்கள். அமேசான் நதிப் படுகையில் 55 லட்சம் சதுர கிலோமீற்றர் அளவுக்குத் தென் அமெரிக்க நாடுகளில் படர்ந்திருக்கும் அமேசான் காடுகள் அந்த நாடுகளைத் தாண்டியும் எல்லா உலக நாடுகளுக்கும் மிகவும் முக்கியமானவை. ஆகவே, இந்தக் காடழிப்பின் விளைவுகள் அந்த நாடுகளோடு முடிந்துவிடும் கதையல்ல.

### அமேசான் எனும் அதிசயம்

பிரேஸில், பெரு, கொலம்பியா உள்ளிட்ட ஒன்பது நாடுகளுக்கு விரிந்திருப்பவை அமேசான் மழைக் காடுகள். இதில் சுமார் 60வீதம் அளவுக்கான காடுகள் பிரேஸிலின் எல்லைக்குள் வருகிறது. உலகில் காணப்படும் பத்தில் ஓர் உயிரினம் அமேசான் காடுகளில் உள்ளன. 40 ஆயிரம் தாவர இனங்கள், 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நன்னீர் மீன் இனங்கள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவையினங்கள் காணப்படும் இந்தக் காடுகளில் கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் 2 ஆயிரம் புதிய உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. உலகிலேயே அதிக அளவு உயிர்ப்பன்மை காணப்படும் பகுதி அமேசான் மழைக்காடுகள் தான். அதுமட்டுமல்லாமல் சுமார் 500 வகையான பழங்குடிகள் இந்தக் காடுகளில் வசிக்கின்றனர். இவர்களில் கணிசமானவர்களுக்கு வெளியுலகத் தொடர்பே கிடையாது.

இங்குள்ள மரங்களின் உச்சிகள் ஒரு விதானம்



போல் பரந்திருப்பதால் காட்டின் பெரும் பகுதியில் தரைக்குச் சூரியஒளி போகவே போகாது. இதனால், தரைப்பகுதி எப்போதுமே கும்மிருட்டாகத்தான் இருக்கும். மழை பெய்தால் உச்சிப் பகுதியைத் தாண்டித் தரையை வந்துசேரச் சில நிமிடங்கள் ஆகும். அந்த அளவுக்கு மரச்செறிவைக் கொண்டவை இந்தக் காடுகள்.

பொதுவாக, அமேசான் உள்ளிட்ட எந்த மழைக் காட்டிலும் காட்டுத்தீ என்பது வழக்கமான ஒன்று. அமேசான் காட்டையே எடுத்துக்கொண்டால் அது ஒவ்வொரு ஆண்டும் 20 ஆயிரம் சதுர மைல் அளவுக்கு எரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் 2 லட்சம் ஏக்கர் பரப்பளவுக்கு இந்தக் காடுகள் எரிந்துபோகின்றன அல்லது எரிக்கப்படுகின்றன. இப்படியான காட்டுத்தீக்கு விவசாயமே முக்கியமான காரணமாகச் சுட்டிக்காட்டப்படுவது வழக்கம். அறுவடைக்குப் பிறகு நிலத்தில் எஞ்சியிருக்கும் அடித்தட்டைகளைக் கொளுத்துவது, விவசாய நிலத் தேவைக்காக காட்டைக் கொளுத்துவது, கால்நடைப் பண்ணைகளை வளர்ப்பதற்காகக் காட்டை அழிப்பது போன்றவை இந்தக் கணக்கில் வரும்.

"தற்போதைய காட்டழிப்பு வீதம் இதே வேகத்தில் தொடருமானால் 2030ஆம் ஆண்டுக்குள் 27 வீதமான வனப்பரப்பை அமேசான் இழந்துவிடும்" என்று எச்சரித்திருந்தது ஐ.நாவின் உலக இயற்கை நிதியம். ஆனால், இப்போதைய நிலை வழக்கத்தைக் காட்டிலும் வேகமாகியிருக்கிறது. அமேசானில் இந்த ஆண்டில் இதுவரையிலான காலம் வரையில் 30 ஆயிரம் காட்டுத்தீ சம்பவங்கள் ஏற்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.

### பொலிவியாவிலும் அழிப்பு

பிரேஸிலில் உள்ள அமேசான் காடுகள் மட்டுமல்ல, பொலிவியாவில் இருப்பதும் அமேசான் காடுகளுக்கு உட்பட்டதுமான சிக்விட்டானோ காடுகளும் கடந்த சில மாதங்களாக அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. காட்டெரிப்பு வேளாண்மையை அனுமதிக்கும் சட்டமொன்று பொலிவியாவில் கொண்டுவரப்பட்டமை இந்த அழிப்புகளை இலகுவாக்கியிருக்கின்றது.

இயற்கையில் எதையுமே பிரிக்க முடியாது. எங்கோ ஏற்படும் சிறு சலனம்கூட இன்னொரு மூலையில் ஒரு பாதிப்பையோ தாக்கத்தையோ ஏற்படுத்தும். அமேசான் காடுகளின் அழிவும் அப்படித்தான். உலகிலுள்ள ஒட்சிசனில் 20 வீதமானவை இந்தக் காடுகளால் உற்பத்தி செய்யப்படுகிறது என்றும் அப்படியல்ல வெறும் 6 வீத ஒட்சிசனை மட்டுமே அமேசான் வெளியிடுகிறது. அந்தக் காட்டை அழித்து உண்டாக்கப்படும் பயிர்களும் அதேஅளவு ஒட்சிசனை உற்பத்திசெய்ய வல்லவை என்றும் ஒரு பெரிய விவாதம் இதையொட்டி நடக்கிறது. ஆனால், அமேசானின் முக்கியத்துவம் ஒட்சிசன் சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல. காடுகள்தான் மழைக்கான, நதிகளுக்கான, உயிர்ப்பன்மைக்கான ஆதாரம். ஒருபோதும் காடுகளுக்கு விவசாய நிலங்கள் ஈடாகாது. எந்தவகையிலும் அமேசான் காடுகளின் இழப்பை மனிதகுலத்தால் ஈடுசெய்ய முடியாது என்றும் சுட்டுகிறார்கள் சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர்கள். நம்முடைய சுயநலமும் பேராசையும் அக்கறையின்மையுமே காடுகளை அழிக்கும் முதன்மைத் தீ. அந்தத் தீயைக் கட்டுப்படுத்திவிட்டால் பாதிப்பிரச்சினை தீர்ந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எண்ணம் நிறைவேறும். தடைபட்ட செயல்கள் இன்று நடந்தேறும். நன்மையான நாள். உங்கள் செயல்கள் பிறரால் பாராட்டப்படும். செல்வாக்கு உயரும். யோகமான நாள். செயல்களில் பொதுநலம் இருக்கும்.

**இடபம்:** இன்று மதியம் வரை இழுபறியாக இருந்த வேலை மாலையில் முடியும். முயற்சியில் இன்று வெற்றி பெறுவீர்கள். எதிரிகள் விலகிச் செல்வர். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மிதுனம்:** அரசு வழியில் பிரச்சினை மதியத்துக்கு மேல் சரியாகும். வரவு அதிகரிக்கும். பிள்ளைகளால் உண்டான பிரச்சினை முடிவுக்கு வரும். தடைபட்ட வருவாய் வரும்.

**கடகம்:** பின்னடைவை சந்திக்கலாம். அரசு விடயத்தில் கவனம் தேவை. திட்டமிட்ட வேலைகளை முடிப்பீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். உங்கள் மனநிலை மாறும். உறவுகளால் சங்கடம் ஏற்படலாம்.

**சிம்மம்:** தடைதாமதம் என்ற நிலை இருந்தாலும் அதன் பின் செயல் நிறைவேறும். எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் கூடும். எண்ணம் நிறைவேறும். தடைகளைச் சரிசெய்வீர்கள்.

**கன்னி:** மதியம் வரையில் இருந்த சூழல் அதன்பின் மாறும். பொருள்களைக் கையாள்வதில் கவனம் தேவை. குடும்பத்தினரின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாமல் போகும். செலவு கூடும்.

**துலாம்:** எதிர்பார்ப்பு நிறைவேறும். மனம் மகிழும் சூழல் உருவாகும். இழுபறியாக இருந்த வேலை நிறைவேறும். குழப்பம் தீரும். செலவு கட்டுப்படும். சுயஆற்றலால் லாபம் ஈட்டுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**விருச்சிகம்:** மதியம்வரை ஆதாயம் வரும். அதன்பின் அலைச்சல், செலவு அதிகரிக்கும். விறுவிறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவு ஏற்படும். நம்பிக்கையுடன் செயற்பட்டு லாபம் காண்பீர்கள்.

**தனுசு:** தொழிலை விரிவு செய்வீர்கள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். திட்டமிட்டு செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். எதிர்பாராத ஆதாயம் வரும். முயற்சி இன்று வெற்றியாகும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும்.

**மகரம்:** தடைபட்ட வேலைகள் இன்று முடியும். தொழிலில் முன்னேறுவீர்கள். செயல்களில் இருந்த சங்கடம் விலகும். பணவரவு கூடும். தனித்தன்மை வெளிப்படும். நினைத்ததை அடைவீர்கள்.

**கும்பம்:** நெருக்கடி தீரும். விருப்பம் நிறைவேறும். இரண்டு நாளாக அனுபவித்த சங்கடம் மறையும். மனதில் நிம்மதி உண்டாகும். நெருக்கடி தீரும். லாபம் பெற புதிய வழிமுறைகளைக் காண்பீர்கள்.

**மீனம்:** எதிலும் கவனமுடன் இருங்கள். செயலில் தடுமாற்றம் ஏற்படலாம். மனதில் மகிழ்ச்சி இருக்கும். அதன் பின் நெருக்கடி தீரும். பணியில் ஆர்வம் இருந்தாலும் நெருக்கடிக்கு ஆளாவீர்கள்.

# பொருளாதார நெருக்கடியை சமாளிக்க உக்ரைனுக்கு 22 கோடி அமெ.டொலர்

## ஐரோப்பிய ஆணையம் அறிவிப்பு



**பிரஸ்சல்ஸ், ஜூன் 11**

**பொருளாதார சூழ்நிலையை எதிர்கொள்ள உக்ரைனுக்கு மேலும் 22 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்க ஐரோப்பிய ஆணையம் தீர்மானித்துள்ளது.**

உக்ரைன் - ரஷ்யா போர் 100 நாள்களைக் கடந்து நீடித்து வருகின்றது. இந்தப் போரில் உக்ரைனின் ஏற்றுமதியை தடுத்து நிறுத்தி பொருளாதாரச் சூழலில் பெரும் பாதிப்பை ரஷ்யா ஏற்படுத்தியுள்ளது.

இதனால் எதிர்வரும் மாதங்களில் லட்சக்கணக்கானோர் பட்டினியில் தள்ளப்படவுள்ளனர் என உக்ரைன் அதிபர் ஷெலன்ஸ்கி தெரிவித்தார். உக்ரைனிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கோதுமை, சோளம், எண்ணெய் மற்றும் பிறபொருள்களை ஏற்றுமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் போரால் சீரழிந்த உக்ரைனில் அதிகரித்துவரும் மனிதநேயம் சார்ந்த நெருக்கடிகளைக் குறைப்பதற்காக ஐரோப்பிய ஆணையம் கூடுதலாக 22 கோடி (20.5 கோடி யூரோக்கள்) அமெரிக்க டொலரை நிதியுதவியாக வழங்கவுள்ளது என அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதேவேளை, உலகின் முக்கிய உணவு ஏற்றுமதியாளரான உக்ரைனில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழலில், ஐரோப்பிய ஒன்றியத்தில் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை ஐரோப்பிய ஆணையம் மேற்கொண்டு வருகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



# கஞ்சா பயன்பாட்டுக்கு தாய்லாந்து அனுமதி

பாங்கொக், ஜூன் 11

கஞ்சாவைப் பயன்படுத்த தாய்லாந்து அரசாங்கம் சட்டபூர்வ அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி தாய்லாந்திலுள்ள தேநீர்க் கடைகள் மற்றும் உணவகங்களில் கஞ்சாவைப் பயன்படுத்தமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தாய்லாந்து சுகாதார அமைச்சர் கூறுகையில்,

பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் பொதுவெளியில் கொண்டாட்டத்துக்காக கஞ்சாவைப் பயன்படுத்தி அத்துமீறலில் ஈடுபட்டால் கடுமையான தண்டனை விதிக்கப்படும். இதுபோன்றவற்றை கட்டுப்படுத்தும் சட்டத்தின் கீழ் எங்களிடம் இன்னும் விதிமுறைகள் உள்ளன" என்றார்.

இதேவேளை ஏற்கனவே கனடா, உருகுவே போன்ற நாடுகளில் கஞ்சாவுக்கு சட்ட அனுமதி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# சர்வதேச நிதியத்தின் இயக்குநராக இந்தியர்

வொஷிங்டன், ஜூன் 11

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய-பசுபிக் துறையின் இயக்குநராக இந்தியாவைச் சேர்ந்த கிருஷ்ணா சீனிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய-பசுபிக் துறையின் இயக்குநராக இருந்த சான்கியாங் ரீ கடந்த மார்ச் 23ஆம் திகதி ஓய்வுபெற்றதையடுத்து இந்தப் பதவிக்கு தற்போது துணை இயக்குநராக உள்ள இந்திய பொருளாதார நிபுணர் கிருஷ்ணா சீனிவாசன் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சர்வதேச நிதியத்தில் 27 ஆண்டுகள் பணியாற்றியதோடு அதற்கு முன் இண்டியானா பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகவும், உலக வங்கி ஆலோசகராகவும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# நூற்றாண்டு பழைமையான நாணயங்கள் கண்டுபிடிப்பு



கொலம்பியாவில் நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த விபத்துக்குள்ளான கப்பலில் இருந்து தங்க நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொலம்பியா கரீபியன் துறைமுகத்தில் இருந்து 1708ஆம் ஆண்டு புறப்பட்ட கப்பல் ஒன்று எதிர்பாராதவிதமாக கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானது. இதில் பலகோடி மதிப்பிலான தங்க நாணயங்கள், விலை உயர்ந்த புதையல்கள் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனைக் கண்டுபிடிக்க பல் வேறு தரப்பினரும் தொடர்ந்து முயற்சியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் கொலம்பியா கடற்படை குறித்த கப்பலில் மேற்கொண்ட ஆய்வில் பல நூறு கோடி மதிப்பிலான தங்க நாணயங்களைக் கண்டுபிடித்துள்ளது.

அத்துடன் குறித்த கப்பலை மீட்கும் முயற்சியிலும் கொலம்பியா கடற்படை ஈடுபட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

ஸ்கொட்லாந்தில்

# மீட்புப் பணியில் எலிப் படைகள்

எடின்பரோ, ஜூன் 11

நிலநடுக்கம், இயற்கைப் பேரிடர்கள் ஆகியவற்றால் நிகழும் இடர்களில் சிக்குவோரை மீட்கும் பணியில் ஸ்கொட்லாந்தில் எலிகள் களமிறக்கப்பட்டுள்ளன.

இதற்கென ஸ்கொட்லாந்து ஆராய்ச்சியாளர்கள் எலிகளுக்கு சிறப்பு பயிற்சி அளித்து வருகின்றனர். கட்டடங்கள் இடியும்போது மக்கள் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டால் அவர்களை மீட்பது மீட்பு குழுவுக்கு சவாலான காரியமாக இருந்து வருகிறது. இந்த நிலையில் இடிபாடுகளில் எந்த இடத்தில் அவர்கள் சிக்கியுள்ளனர் என்பதை அறிய எலிகளுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. விரைவில் அவை மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்படும் என ஸ்கொட்லாந்து ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிப்பை தொடர்ந்துகொண்டு பங்குதாரராகுமாறு எப்படிக் கேட்கலாம்?

## சித்தார்த்தன் எம்.பி. கேள்வி



**கொழும்பு, ஜூன் 11**

**நாட்டைக் கட்டி எழுப்புவதற்கான முயற்சியில் முழு நாடும் பங்குதாரர்களாக இருக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் குறிப்பிட்டார். எங்களுடைய பகுதிகளில் அத்துமீறி செய் கின்ற விடயங்களை உடனடியாக நிறுத்த வேண்டும். அதை நிறுத்தாமல் தொடரும்போது எப்படி நாங்கள் முழுமையான மனதுடன் இந்தப் பொருளாதார சிக்கலைத் தீர்க்க உதவமுடி யும்? இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கேள்வி எழுப்பினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் உரையாற்றும்போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, டொலர் தட்டுப்பாடும் பொருளா தாரப் பின்னடைவும் இருக்கின்ற போது டொலரை கொடுத்து வாங்கக் கூடிய எரிபொருள் மூலம் நடத்தப் படுகின்ற மின் உற்பத்தி நிலையங் களை நம்பியிருக்காமல் இயற்கை வளத்தால் கிடைக்கக் கூடிய மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

மன்னார் தொடக்கம் காங்கேசன் துறை வரையான பிரதேசங்கள் காற்றாலை மின் உற்பத்தி நிலை யங்களை உருவாக்குவதற்கு மிகப் பொருத்தமான இடமாக விளங்கும். அந்தப் பகுதிகளில் மின் உற்பத்தி நிலையங்கள் உருவாக்கவும் நடவ டிக்கை எடுக்கப்படுகின்றது.

காற்றாலை மற்றும் சூரிய ஒளியால் உருவாக்கப்படும் மின்சக்தி நிலை யங்கள் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் உருவாக்கப்படும் மின்சக்தி நிலையங்களை உருவாக்க நட வடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கிலே காற்றாலை மின்சாரம் உருவாக்குவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. ஆனால், இது ஒரு வித பாதிப்பை ஏற்படுத்துமென மக்கள் மத்தியில் பயம் உள்ளது. மின் உற்பத்தியால் கிடைக்கின்ற லாபத்தில் கட்டாயமாக ஒரு பகு தியை அந்தப் பகுதி அபிவிருத்திக்கு ஒதுக்க வேண்டும்.

இது பல இடங்களில் இடம்பெறு கின்றது. தனியார் நிறுவனங் களோ வெளிநாட்டு நிறுவனங் களோ அதானி குழுமமாகவோ இருக்கலாம். யாராக இருந்தாலும் கிடைக்கும் லாபத்தில் ஒரு பகுதியை கட்டாயமாக அந்தப் பகுதிக்கான அபிவிருத்திக்கு ஒதுக்குவதற்கு முன்வர வேண்டும்.

இந்தியாவைப் பொறுத்தவரை நெருக்கடியான நிலையில்இலங் கைக்கு உதவி செய்து வருகின்றது. இந்தியப் பிரதமர் மோடிக்கும் தமி ழக முதல்வருக்கும் நன்றி தெரி விக்க வேண்டும்.

புலம்பெயர் தமிழர்கள் இங்குள்ள பொருளாதார நெருக்கடிக்கு உதவ வேண்டும் என்ற கோரிக்கை மிகப் பெரிய அளவில் முன்வைக்கப் படுகின்றது. ஜனாதிபதியுடனான சர்வகட்சி மாநாட்டிலும் இது பற்றி பேசப்பட்டது. அப்போதும் நாம் கூறி யது, ஆக்கறுைநந்து பாதுகாப் புத் தரப்பினரின் காணி பிடிப்பது உள்ளிட்ட அத்துமீறல்களையாவது தமிழர் பகுதியில் தடுக்க வேண்டு மென்றோம். அப்போது அது பற்றி தனக்குத் தெரியாதென பிரதமர் கைவிரித்தார். அவர் கூறிய பின்பும் இவ்வாறான விடயங்கள் இடம்பெற் றன. ஆகவே இவ்வாறான விடயங் களை நிறுத்தினால் நாட்டிலுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண முடியும். இதை அரசாங்கம் செய்ய வேண்டும் - என்றார். (ஒ-இ)

# ரஷ்யாவிடமிருந்து எரிபொருள்; உடன் பேச்சை ஆரம்பியுங்கள்

## சுயாதீன அணி கோரிக்கை

**கொழும்பு, ஜூன் 11**

நீண்டகால அடிப்படையில் ரஷ்யாவிடமிருந்து எரி பொருளைக் கொள்வனவு செய்வதற்கு இருதரப்பு பேச்சுக்களை உடன் ஆரம்பிக்குமாறு 9 சுயாதீன கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கையை அவர்கள் கடிதம் மூலம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அதில் இந்தக் கோரிக்கை தொடர்பில் கலந்துரையாட விரைவில் சந்தர்ப்பம் வழங்கவேண்டும் எனவும் நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி தொடர்பில் ஆட்சியாளர்கள் பொறுப்பின்றி செயற்படுகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)



ஜே/335 மிருசுவில் வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 30 பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கு தொண்டைமனாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸினால் உலர் உணவுப் பொதிகள் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன. (ய-159)



கொடிகாமம் போக்கட்டி அ.த.க. பாடசாலையின் மாணவர்களுக்கு திறன் வகுப்பறை பயன்பாட்டுக் காக வேள்ட்விசன் நிறுவனத்தால் 25 விரிவுரைக் கதிரைகள் பாடசாலை அதிபர் தி.அபராஜிதனிடம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழங்கப்பட்டன. (ய-159)



மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தில் அமரர் சின்னத்தம்பி குணநாயகத்தின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட 50 அடி நீள மான இளைப்பாறும் கொட்டகையை, அவரது மனைவி திரைநீக்கம் செய்து பாடசாலைச் சமூகத்திடம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கையளித்தார். (ய-159)

### ரூ.4 லட்சம் பெறுமதியான

# தவறவிடப்பட்ட கைபேசி உரியவரிடம் ஒப்படைப்பு

**கிளிநொச்சி, ஜூன் 11**

தவறவிடப்பட்ட கைபேசியை இளைஞர் ஒருவர் கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்தார்.

புலம்பெயர் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த நப ரொருவர், கிளிநொச்சி திரு வையாறு பகுதியில் உள்ள கிராமப் பாடசாலை ஒன்றுக் கும், பொருண்மியம் நலிந்த நோயாளி ஒருவருக்கும் உதவி செய்வதற்கு கடந்த 8 ஆம் திகதி கிளிநொச்சி சென்றுள்ளார்.

இதன்போதே அவரது 4 இலட்சம் ரூபா பெறுமதியான கைபேசியை வீதியில் தவறவிட் டுள்ளார்.

வீதியில் காணப்பட்ட கைபே சியை புதுமுறிப்பு கிராமத்தைச் சேர்ந்த செல்லத்துரை தவக்கு மார் என்ற இளைஞர் கண்டெ டுத்து, நேற்று முன்தினம் உரி யவரிடம் ஒப்படைத்தார்.

இளைஞனின் இந்தச் செயலை அனைவரும் பாராட்டியுள்ளனர். (ஒ-14-214)

# வீட்டுத்தோட்டச் செய்கையைப் பாதுகாக்க குரங்குகள் சரணாலயம் அமைக்க வேண்டும்

## ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன் தெரிவிப்பு

வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையைப் பாது காக்க குரங்குகள் சரணாலயம் அமைக்க வேண்டும் என்று தென்மராட்சி வலயக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன் தெரிவித்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத் தில் இடம்பெற்ற இளைப்பாறும் கொட்டகை திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தென்மராட்சிப் பிரதேசங்களில் வீட்டுத் தோட்டம் செய்யும் பயனாளிகள் உள் ளனர். அவர்களால் தயாரிக்கப்படும் போசாக்கான உணவுகள் பாடசாலை மாணவர்களுக்குக் கிடைக்கின்றன. தற் போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் மாணவர்களுக்கு வழங் கப்படும் உணவுகள் நிறுத்தப்பட்டுள்ளன. வீட்டுத்தோட்டத்தில் உருவாகும் பயிர் களைக் கொண்டு பிரதேச பயனாளிகள் போசாக்கான உணவுகளைத் தயாரித்து மாணவர்களுக்கு வழங்கி வருகின்றார்கள். இந்த நிலையில் தென்மராட்சியில் குரங்கு களின் தொல்லை பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. வீட்டுத்தோட்டத்தில் உரு வாக்கும் பயிர்களைத் தோட்டத்தில் புகுந்து அழிக்கின்றன.

அவ்வாறு பயிர்கள் நாசமடைவதுடன் அவர்களின் வருமானமும் பாதிக்கப்படு கின்றது. மாணவர்களுக்கும் எமது பிரதேச மக்களுக்கும் போசாக்கான உணவு கிடைக்க வேண்டுமென்றால் நாம் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையைப் பாதுகாக்க வேண் டும். அவ்வாறு பாதுகாத்தால் மட்டுமே இப் போதுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழ முடியும். எனவே குரங்குகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்த சரியான இடத்தைத் தெரிவு செய்து குரங்குகள் சர ணாலயம் ஒன்றை அமைக்க வேண்டும். இதற்கு உரிய அதிகாரிகள் முன்வந்து நட வடிக்கைகளை முன்னெடுத்தால் மட்டுமே எதிர்காலத்தில் வீட்டுத்தோட்டச் செய்கை யைப் பாதுகாத்துத் தன்னிறைவான பொரு ளாதாரப் பிரதேசத்தை எம்மால் ஏற்படுத்த முடியும் என நம்புகின்றேன் -என்றார். (ஒ-14-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் நெருக்கடியை சமாளிக்க சிங்கப்பூர் கைகொடுக்க வேண்டும்

## ஜி.எல். பீரிஸ் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 11

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும்வகையில் சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கு அதிக வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க சிங்கப்பூர் அரசாங்கம் வழி செய்யவேண்டும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் விடுத்த அழைப்புக்கு அமைய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் சிங்கப்பூருக்கு இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டார்.

அங்கு நடைபெற்ற இருநாட்டு வெளிவிவகார அமைச்சர்களின் சந்திப்பின் போதே வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கான நிதியுதவியைப் பெறுவதற்கும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிப்பதற்கும், இலங்கை ஏற்றுமதிகளுக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் சிங்கப்பூர் அரசாங்கத்தின் உதவி எமது நாட்டுக்கு தற்போது அவசியமாகவுள்ளது.

அத்துடன் சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க சிங்கப்பூர் அரசாங்கம் வழிவகுக்கவேண்டும். தற்போது, சிங்கப்பூருக்கு சுகாதாரப் பணியாளர்களைக் குறிப்பாக தாதியர்களை அனுப்புவதில் இரு நாடுகளும் நெருக்கமாக செயற்படுகின்றன.

அதேவேளை சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கத்தின் மனிதாபிமான உதவியாக சிங்கப்பூர் அரசாங்கம் ஒரு லட்சம் அமெரிக்க டொலரை வழங்க உறுதியளித்ததற்கு நன்றி. செஞ்சிலுவைச் சங்கத்தின் முதல் மருத்துவப் பொருள் தொகை ஏற்கனவே இலங்கையை வந்தடைந்துள்ளன -என்றார்.

இந்த சந்திப்பைத் தொடர்ந்து அமைச்சர் பீரிஸ், சிங்கப்பூரின் சிரேஷ்ட அமைச்சரும் சமூகக் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சர், சிங்கப்பூரின் சுகாதார மற்றும் மனிதவள சிரேஷ்ட இராஜாங்க அமைச்சர், இலங்கைக்கான சிங்கப்பூரின் வதிவிடமற்ற தூதுவர், டெமாசெக் சர்வதேச அறக்கட்டளையின் தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சின் சிரேஷ்ட பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடினார். (ச-இ)

# கடந்த இரண்டு ஆண்டுகளில் நாடு சரியான பாதையில் பயணிக்கவில்லை

## மத்திய வங்கி ஆளுநர் எடுத்துரைப்பு



**கொழும்பு, ஜூன் 11**

**கடந்த இரண்டு ஆண்டுகளில் நாடு சரியான பாதையில் பயணிக்கவில்லை. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் வரை நான் அறிந்திருக்கவில்லை. அதிகாரிகளின் தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டே கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன எனக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. -இவ்வாறு மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்ஹ தெரிவித்தார்.**

நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2019ஆம் ஆண்டின் இறுதியில் புதிய அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட வரி மறுசீரமைப்புக் காரணமாக ஏறத்தாழ 500 பில்லியன் ரூபா வருமானம் இழக்கப்பட்டது எனக் கூறுவது நியாயமற்றது. வாகன இறக்குமதி இடைநிறுத்தம் உள்ளிட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையால் ஏற்பட்ட இழப்பு மற்றும் கொவிட் சூழலால் ஏற்பட்ட பொருளாதார சுருக்கம் என்பனவும் இந்த நிலைமைக்குக் காரணம் என்று நிதி அமைச்சின் முன்னாள் செயலர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, 2019ஆம் ஆண்டு டிசெம்பர் 4ஆம் திகதி முன்வைத்த முதலாவது அமைச்சரவைப் பத்திரத்துக்கு இணங்க வரிக் கொள்கைகள் தொடர்பான இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக ஆட்டிகல மேலும் குறிப்பிட்டார்.

அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது அது தொடர்பில் பின்னணிக் குறிப்பு மற்றும் அறிக்கை காணப்பட வேண்டும் என்றும், குறிப்பிட்ட விடயத்துக்குப் பொறுப்பான அதிகாரிகளிடமே இதற்கான முழுப் பொறுப்பும் காணப்படுகிறது என்பதும் அரசாங்க நிதி பற்றிய குழு உறுப்பினர்களின் நிலைப்பாடாக இருந்தது.

சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் ஏற்பட்டதை ஒப்புக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும், மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றின் முறையான ஆய்வுக்குப் பின்னரே அத்தகைய முடிவுகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

கொவிட் தொற்றுநோய் சூழல் ஏற்படுவதற்கு முன்னர், அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட நிதிக் கொள்கைத் தீர்மானங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்து நாணய சபையின் தெளிவான முடிவுகள் அடங்கிய அறிக்கையை பொருளாதார நிபுணர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள் யாராவது எழுத்துமூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்களா என்றும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் உறுப்பினர்கள் மேலும் கேள்வியெழுப்பியிருந்தனர்.

முன்னாள் செயலர் பி.பீ.ஜயசுந்தர இதற்குப் பதிலளிக்கையில், இவ்வாறான தீர்மானங்கள் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுவதாகவும், அதன் பின்னர் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

அரசியல் அதிகாரிகளால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களில் குறைபாடுகள் காணப்படும்போது அப்போது பொறுப்புக் கூறவேண்டி அதிகாரிகள் என்ற ரீதியில் நிபுணர்கள் மற்றும் துறைசார் விற்பன்னர்களால் அவை குறித்து தமது உயர் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறுவதற்கும் அதுபற்றி தெளிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் உறுப்பினர்கள் மீண்டும் வினவினர்.

இங்கு கருத்துத் தெரிவித்த மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் நந்தலால் வீரசிங்ஹ குறிப்பிடுகையில், அரசாங்கத்தில் பொறுப்புக்களை வகிக்கும் அதிகாரிகள் அரசியல் செய்வதிலிருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடு உரிய முறையில் அடையாளம் காணப்பட வேண்டும் என்றும் கூறினார்.

அரசியல்வாதிகளால் எடுக்கப்படும் தீர்மானங்கள் தவறாக இருக்கும் போது அவற்றைச் சுட்டிக்காட்டவேண்டியது அதிகாரிகளின் பொறுப்பு எனவும், அவ்வாறான தீர்மானங்களால் ஏற்படக்கூடிய பிரதிபலன்களுக்கு அரசியல்வாதிகள் மாத்திரம் பொறுப்பேற்க முடியாது என்றும் தெரிவித்தார்.

கொள்கைத் தீர்மானங்களால் ஏற்படக்கூடிய பக்கவிளைவுகள் தொடர்பில் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளிடமும், அப்போதைய அரசியல் அதிகாரிகளிடமும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்தபோதும் எவரும் அவற்றைக் கவனத்தில் கொள்ளவில்லை என இங்கு கலந்துகொண்ட குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

உழைக்கும்போது செலுத்தும் வரியை நீக்குவதற்கு எடுத்த தீர்மானத்தால் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதாகவும், இவ்வாறு வரியைக் குறைத்தமையால் 12.5 வீதமாகக் காணப்பட்ட அரசாங்கத்தின் வருமானம் 8.7 வீதமாகக் குறைந்தது என அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்- என்றுள்ளது. (ஒ-இ)

# அவலை நினைத்து உரலை இடிக்கும் கோத்தா!

## இப்படிச் சொல்கிறார் உதயங்க

கொழும்பு, ஜூன் 11

என்னைப் பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு ரஷ்ய விமானத்தை இலங்கையில் தடுத்து வைத்து சுற்றுலாத்துறையை வீழ்ச்சியடையச் செய்ய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முயல்கின்றார் என்று ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, ரஷ்யாவில் உள்ள புடினுக்கும் நமது புடினுக்கும் உள்ள வித்தியாசம் எனக்கு நன்றாக தெரியும். சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் ரஷ்ய விமானங்களை நான் இறக்குமதி செய்தேன். என்னைத் தாக்கும் நோக்கில் கோத்தாபய ஒட்டுமொத்த சுற்றுலாத் துறையையும் அழித்து வருகின்றார்.

ரஷ்ய விமானத்தை கட்டுநாயக்காவில் தடுத்து நிறுத்தியது ஒரு சதி. இதன் பின்னணியில் அமெரிக்க ஆதரவு அரசாங்கம் இருக்கின்றது.

நான் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளை அழைத்து வந்தேன். கோத்தாபய ஐயா என்னைத் தாக்கி சுற்றுலாத்துறையை அழிக்க நினைக்கின்றார். அண்ணனை கவனிக்காதவர் அத்தையின் மகனை என்ன செய்வார்? என்று சொல்லத் தேவையில்லை. இன்று என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள தலைமறைவாக உள்ளேன்- என்றார். (ஒ-இ)

# இலங்கைக்கு நிதி திரட்டும் பரப்புரை அவு. கிரிக்கெட் வீரர்கள் இணைவு

கொழும்பு, ஜூன் 11

இலங்கைக்கு நிதி திரட்டும் பரப்புரை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு தமது ரசிகர்களை உதவுமாறு அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர்களான ஸ்ரீவன் ஸ்மித் மற்றும் மிட்செல் ஸ்ராக் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் காணொலியையும் வெளியிட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைப் பிரதிநிதிகள் குழு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள நிதி திரட்டும் பரப்புரைக்கு ஆதரவளிக்குமாறு உலகெங்கிலும் உள்ள தமது ரசிகர்களை அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்த நிதி திரட்டும் பரப்புரை இந்த மாதம் ஆரம்பமானது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் 47.2 மில்லியன் டொலரைத் திரட்டுவது இதன் இலக்காகும்.

இந்த நிதி இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப் பயன்படுத்தப்படும். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று கலைப்பீட மாணவர் ஒன்றியத் தேர்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தேர்தல் இரண்டு வருடங்களின் பின்னர் நேற்று இடம்பெற்றது.

காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை இந்தத் தேர்தல் இடம்பெற்றது. வேட்பாளர்களாக வி.ஜெனார்த்தனன் மற்றும் சி.ஜெல்சின் போட்டியிட்டனர். 645 வாக்குகள் பதிவான நிலையில் ஒருவாக்கு நிராகரிக்கப்பட்டது. செல்லுபடியான வாக்குகளில் 476 வாக்குகளைப் பெற்று கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராக சில்வஸ்ரார் ஜெல்சின் தெரிவு செய்யப்பட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மாணவர் ஒன்றியத்தலைவர் பதவி இந்த வருடம் சுழற்சி முறையில் கலைப்பீடத்துக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-125)


## பெயர் திருத்தம்

எனது பிறப்புச்சான்றிதழில் (இல. 2189) எனது பெயர் சந்திரகலா மோகன்ராஜ் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. எனது பெயர் தர்மசீலன் மோகன்ராஜ் என்று தற்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே இனி வரும் காலங்களில் எனது பெயர் தர்மசீலன் மோகன்ராஜ் என்று அனைத்து ஆவணங்களில் கையொப்பமிடுவேன் என்பதை இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**தர்மசீலன் மோகன்ராஜ்**

## பெயர் மாற்றம்

சிவபாலன் கௌரிபாலன் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை சிவபால் பாலன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் சிவபால் பாலன் என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**சிவபால் பாலன்**

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 30 . 12 . 1953



மறைவு 23 . 05 . 2021

### பெரியதம்பி பற்குணராசா

(பாதுகாப்பு உத்தியோகத்தர் காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம்)

திதி : 11.06.2022

சத்தம் இல்லாமல் சித்தம் துடிக்க வைத்து
மொத்தமாய் எங்களை மோசம் செய்து
விண்ணுலகு சென்று ஓராண்டானதுவோ
விழிதேடும் இடமெல்லாம் தெரிகிறதே உங்கள் முகம்
தீராத வேதனையில் துடிக்கிறதே எங்கள் மனம்
வாழும் நாள்வரை உங்கள் நினைவோடு வாழ்ந்திடுவோம்
ஞான வைரவரின் திருவடிகளில்
ஆன்மா சாந்தி பெற இறைஞ்சுகிறோம்

மயிலங்கூடல்,
இளவாலை

குடும்பத்தினர்

(CS 44845)(3/6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் மயிலங்கூடலூர் பி.நடராசன்

தோற்றம் 14.08.1939 — மறைவு 12.05.2022

*அன்புடனே அறிவுமிக அழகுறவே அமைந்தீர்*
*அரியபெரும் கல்வியினால் அனைவரிலும் உயர்ந்தீர்*
*பண்போடு வாழ்ந்திட்ட ஆசிரியர் ஆனீர்*
*உழைத்தபெரும் செல்வமெலாம் நூல் வாங்க ஈந்தீர்*
*உறவினரை உந்தனது கண்போலக் காத்தீர்*
*கல்வியிலே வழிகாட்டி நல்ல இடம்சேர்த்தீர்*
*வரமான புன்னகையும் வெள்ளை நிற உடையும்*
*இனி எங்கு காண்போம் நாம் நெஞ்சத்தில் வாழ்வீர்*

குடும்பத்தினர்
இல. 314 செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 03 . 1956



மறைவு 08 . 06 . 2022

### திரு. செபமாலை யேசுதாசன்

கூளாவடி ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் ஜேர்மனை வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை யேசுதாசன் கடந்த 08.06.2022 புதன்கிழமை காலை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை ஆரோக்கியம் தம்பத்தியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை லூர்தம்மா தம்பதியரின் அன்புமிகு மருமகனும், மேரி ஜொய்சியின் (பிரான்ஸ்) பாசமிகு கணவரும், சேளிலம்பேட் (பிரான்ஸ்), சாளிலுமின்பேட் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மேரிமலர், ஞானமலர், மரியமலர், மேரிதிரேசா, அன்னமேரி (சுவிஸ்), காலஞ்சென்ற செல்வமலர் மற்றும் மரியதாஸ் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்), சூசைதாஸ், ஜெயசந்தானமேரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், தர்சினி (பிரான்ஸ்), ராதிகா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தோமஸ் பூபாலு சூசைப் பிள்ளை, அன்ரனி, பெனடிற், அன்ரன்லோகநாதன் (சுவிஸ்), றதி, வண்ணமலர், சந்திரமோகன், யோகநாதன், அமலன், சாமினி, மீனா ஆகியோரின் மைத்துனரும், கிபேஸ், ஜெனோஸ், சொனாலி (பிரான்ஸ்), ஜெய்டன், அமாயா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் கூளாவடியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆராதனை வழிபாடு நடைபெற்று காக்கைதீவு கத்தோலிக்க சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கூளாவடி 4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர்
077 620 4578

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 01 . 1942



மறைவு 08 . 06 . 2022

### நாகலிங்கம் அன்னம்மா (பவளம்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கல்வியங்காட்டினை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் அன்னம்மா (பவளம்) 08.06.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெள்ளையன் தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆழ்வார் சீதேவி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆழ்வார் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ரவி (பிரான்ஸ்), புஸ்பராசா (பிரான்ஸ்) அப்புக்கிளி, சகுந்தலா (கட்டார்), ராணி, கீத்தா, கமல் (ஜேர்மன்), உதயா ஆகியோரின் அன்புத் தாயாரும் பப்பி (பிரான்ஸ்), ஜடசி (பிரான்ஸ்), தயா, எட்மன் (கட்டார்), ரவி, சபேஸ், றாஜி (ஜேர்மன்), கோணேஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C.T.S வீதி, நாவலர் வளவு,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்
077 724 9988, 075 998 6678


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)

Bill of Quantities
Proposed Driveway improvement work at LFS - main street for Jaffna Multi Purpose Co-operative Society (Ltd)

எரிபொருள் நிலையத்தின் முற்பக்கப்பாதை புனரமைப்பதற்கான

**கூறுவிலை கோரல்**

| Item | Description | Qty | Unit | Rate | Amount |
|---|---|---|---|---|---|
| 1 | Cutting & Removing 75mm thick existing tar surface and dispose the debris as directed. | 225.0 | $m^2$ | | |
| 2 | 1:2:4 ( 20mm) concrete floor ( 100 mm thick ) areas with 6 mm mild steel in 300mm spacing. Rate to include expantion joints at 3m crs. Both ways as per engineer's instruction and testing for concrete, Plant for mixing, handling , hosting , depositing, compacting, vibrating, Cecring, macking good after removed of form work and for keeping 8mm expantion joints with premix. | 225.0 | $m^2$ | | |
| | Total | | | Rs. | |

**விண்ணப்ப முடிவுத் திகதி :- 2022.06.25**

**விண்ணப்பிக்கும் முறை :**

மேற்படி கூறுவிலைக்கான விண்ணப்ப படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா. 100.00 இனை செலுத்திப் பெற்று, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "Proposed Driveway improvement work at L.F.S. - Main Street " எனக்குறிப்பிட்டு 'தலைவர், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வது, இல 127 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 2022.06.25 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து).**

## கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

## வழிபடுவோர் மகாசபைக் கூட்டம்

- இடம் : மனோன்மணி அம்பாள் திருமண மண்டபம்
- காலம் : 18.06.2022 சனிக்கிழமை
- நேரம் : பி.ப. 4.30 மணி

**அன்றையதினம்**

மகாசபைக் கூட்டமும் பரிபாலன, தர்மகர்த்தா உறுப்பினர் தெரிவும் நடைபெறும்.
உறுப்பினர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- பரிபாலன சபை -

(cs 45142) (2.6)

## காணவில்லை



அளவெட்டி மேற்கைச் சேர்ந்த

**உமாபதிசிவம் சிவபாலன்**

**வயது - 56**

என்பவர் அளவெட்டியில் 01.06.2022 இல் இருந்து காணவில்லை. இவரின் விபரம் அறிந்தவர்கள் கீழுள்ள இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**076 701 6687**

(CS 45114) 9(3/6)

உ
ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ
ஸ்ரீ காளி அம்பாள் துணை

## உடுவிற்பதி திருவருள்மிகு அன்னை ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தானம்

## அபிராமி அறிவகம் நூல் நிலையம்

## அறநெறிப் பாடசாலை

## திறப்புவிழா அழைப்பு

- காலம் : 13.06.2022 திங்கட்கிழமை
  முற்பகல் 10.00 மணி
- இடம் : காளி கோவில் வளாகம்
  காளிகோவிலடி (அம்பலவாணர் வீதி)
  உடுவில், சுன்னாகம்.

பிரதம விருந்தினர் :

**திரு.க.மகேசன்**
(அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம்)

காளியம்பாள் தேவஸ்தான நிர்வாக சபை,
அடியார்கள்,
அ.வ.பாலசுப்பிரமணியம் குடும்பத்தினர்.

அனைவரும் வருக! ஆதரவு தருக!

(cs 45137) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 - 11 - 1946



மறைவு
06 - 06 - 2022

**திரு. ஐயாத்துரை நாகரத்தினம் தெய்வேந்திரன் (தேவா)**

யாழ். கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா Mississauga வை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நாகரத்தினம் தெய்வேந்திரன் அவர்கள் 06.06.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் பராசக்தி தம்பதிகளின் ஏக புதல்வரும், காலஞ் சென்றவர்களான நந்தாவில் கொக்குவிலைச் சேர்ந்த இராசரத்தினம் செல்லம்மா தம்பதிகளின் அருமை மருமகனும், ஜீவா அவர்களின் ஆருயிர்க் கணவரும், தாரணி, ஜனகன், ஜனந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிஷான் அவர்களின் அருமை மாமனாரும், கவின், தேவன், ரைலர் ஆகியோரின் ஆசைத் தாத்தாவும், காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தர், பசுபதி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், நவரத்தினம், கனக ரத்தினம், ஸ்ரீபதி மற்றும் அரசரத்தினம் (கனடா), கமலா (லண்டன்), லீலா (கொழும்பு) ஆகி யோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் வில்வராணி ஆகியோரின் அன்பு மருமகனும் சிவநேசன், சிவசக்தி, சிவமலர், சிவபாலன், பாலகுமரன் காலஞ்சென்ற பாலரஞ்சன் மற்றும் பாலமுரளீதரன், பாலமுகுந்தன் ஆகியோரின் அன்பு அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடை பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 386 7458
077 340 5978

ஜீவா-மனைவி -0019058284028
ஜனகன்-மகன் -0016472975509
ஜனந்தன்-மகன்-0016472716345

தகவல்:
தாரணி-மகள்
**0016479629941**

## நன்றி நவிலல்

தோற்றம்
22 . 01 . 1927



மறைவு
10 . 05 . 2022

**அமரர் கதிர்காமு வெற்றிவேலு**

எமது குடும்பத் தலைவர் அமரர் திரு கதிர்காமு வெற்றிவேலு அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து நேரிலும் வெளியூர் உள்ளூரிலிருந்தும் தொலைபேசி ஊடாக ஆறுதல் கூறிய அனைவருக்கும் அன்னாரது இறுதி ஆராதனையில் கலந்து கொண்ட கிறிஸ்தவ மதகுருமார், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் ஏனைய அனைத்து உதவி ஒத்துழைப்புகளையும் கண்ணீர் அஞ்சலி மற்றும் மலர் வளையம் பதாகைகள் வழங்கியோருக்கும் அன்னாரின் இறுதி நிகழ்வில் பங்கெடுத்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

"இரத்தினவாசம்"
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி

குடும்பத்தினர்
**0779 54 5175**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



## திருமதி தங்கம்மா வைரமுத்து

மண்ணுலகில் 12.07.1932 — விண்ணுலகில் 21.06.2021

திதி: வளர்பிறை துவாதசி

பாசமுடன் நேசம் வைத்தே
அன்புதனை தந்தே என்றும்
சீராட்டி வளர்த்த என் அம்மம்மாவே...


ஓராண்டு ஈராண்டாய் பல ஆண்டுகள்
சென்றிடினும்
உயிருள்ளவரை உங்கள் நினைவாய்
வாழ்ந்திடுவேன்.

1ஆம் கட்டை,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவில்வாடும்
பேரன் - மோகன்ராஜ்

(cs 45143) (2.6)

# மரண அறிவித்தல்



## அருட்தந்தை கலாநிதி
## அன்ரன் மத்தாயஸ் அடிகள்

[முன்னாள் துறைத் தலைவர்,சிரேஸ்ட விரிவுரையாளர் – கிறிஸ்தவ நாகரீகத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்
முன்னாள் அதிபர் – புனித மநுத்தீனார் குருமடம்
முன்னாள் முகாமையாளர் புனித வளன் கத்தோலிக்கஅச்சகம்–பிரதம ஆசிரியர் "பாதுகாவலன்"
முன்னாள் பங்குத்தந்தை நல்லூர் ஆசீர்வாதப்பர் ஆலயம்,கோப்பாய் மரியன்னைஆலயம்]

யாழ் மறைமாவட்டக் குருவாகிய அருட்தந்தை கலாநிதி அன்ரன் மத்தாயஸ் அடிகள் கடந்த 10.06.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி J.D.மத்தாயஸ் தம்பதிகளின் அன்பு மகனாரும், மரியதாசன் (அவுஸ்ரேலியா), கிறேஸ் (கொழும்பு), காலஞ்சென்ற ஜோய், காலஞ்சென்ற ரஞ்சன், மற்றும் நிர்மலா (லண்டன்), தர்சினி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மெற்றில்டா, காலஞ்சென்ற பெனடிக்ற் மற்றும் மலர் (கனடா), பே(B)ணி (கொழும்பு),சந்திரசேன (லண்டன்), கிறிஸ்ரி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் மைத்துனரும், ஷாலினி, அமரன், விவேகா, தீபா, இராஜன், கிஷான், சந்துனி, DR.பிரான்சஸ், DR.அஞ்சலா, DR.பிரான்சிஸ் ,DR. கிளாரன்ஸ் ஆகியோரின் ஆசை மாமனாரும், விக்டோரியா, இவென்டா, செறிக்கா, சைலேஸ், லக்ஷனா, சாரினி, அபிகேல், நிரேஸ், ஜியானா, லூக், கேயிலா, யூவானா, ஜியானா, றொஷான், டானியல், நீல், நிக்கில் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அடிகளாரின் பூதவுடல் இறைமக்களின் அஞ்சலிக்காக யாழ் ஆயர் இல்லசிற்றாலயத்தில் வைக்கப்பட்டு இன்று 11.06.2022 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, தொடர்ந்து யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை குருக்கள், துறவிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
மரியதாசன் மத்தாயஸ்- சகோதரன்

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 11 . 1937 — மறைவு 10 . 06 . 2022



## சிதம்பரப்பிள்ளை இராசையா

மந்துவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை இராசையா அவர்கள் நேற்று (10.06.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவரான சிதம்பரப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதிகளின் புத்திரனும் பொன்னையா சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் தங்கம்மாவின் அன்புக்கணவரும் பாலசுப்பிரமணியம் (நெதர்லாந்து), பத்மநாதன் (ஓய்வு நிலை பிரதிப் பிரதம செயலாளர் - நிதி), பரமேஸ்வரி (பிரான்ஸ்), சிவகுமாரி, மல்லிகாதேவி (பிரான்ஸ்), பாலச்சந்திரன், பாலசுந்தரம் (லண்டன்), விஜயகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் குணலோகநாயகி (நெதர்லாந்து), நகுலினி (ஆசிரியை யா/கனகரத்தினம் ம.ம வித்தியாலயம்), மனோகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், கிரிசாகரன் மற்றும் சிவனேஸ்வரி, சுகந்தினி (லண்டன்), கிருஷ்ணகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா,கந்தையா, முத்தையா மற்றும் அன்னம்மா, ஐயாத்துரை, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரணவன், கேதாரன், சயந்தன், மேசிகன், ஜெனகா, யாழினி, விதுரன், விதுஸ்லா, விதுசனா, துளசி, சங்கவி, பகலவன், பானுசன், டிக்சாயி, கவிசா, தர்சன், டக்சன்,கிசான், நிசானா, ஆகியோரின் பேரனும் டனிஸ்காவின் பூட்டனும் கனகம்மா நல்லம்மா, தவமணி, அமர்தலிங்கம் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் நஞ்சிதமலர், தர்மலிங்கம ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று புதவுடல் தகனத்திற்காக தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
071 861 8019, 070 765 5001 — பத்மநாதன்

# மரண அறிவித்தல்

மண்ணில் 11 . 04 . 1953 — விண்ணில் 07 . 06 . 2022



## திரு. குமரையா ரவீந்திரகுமார் (ரவி)

(இளைப்பாறிய சுங்கத்திணைக்கள உத்தியோகத்தர்)

யாழ். கச்சேரி கிழக்கு சந்தானமாதா கோவில் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட குமரையா ரவீந்திரகுமார் அவர்கள் கடந்த (07-06-2022) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான E.K குமரையா - டெய்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குணரட்ணம் - மரியரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பற்றீசியா நவமணி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும், யாழினி (பிரித்தானியா) அவர்களின் அன்புத் தந்தையும், பிரசாத் அவர்களின் அன்பு மாமாவும், காலஞ்சென்ற தேவராஜன், சாந்தினி, ஜெயந்தினி, கிறிஸ்ரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மங்களா, ராஜன், யூலியன், டெய்சி, ஜெயராஜ்- இன்பம், ஜெயசீலி – அரசரட்ணம், லீலா- ஆரோக்கியம், விமலா- நவரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், டீன், சசி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சிந்துஜா, பேடின், றஜீவன் ஆகியோரின் அன்பு மாமாவும், கிறிஷாந்தி, வினோ, வினித் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், காலஞ்சென்ற டேவிட் ஜெயராணி அவர்களின் ஆசைப் பெறாமகனும், றெனோன், றிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 13-06-2022 திங்கட்கிழமை அன்று மு.ப 10:30 மணியள வில் பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| யாழினி - மகள் | UK- Mobile : | + 447 949 448 877 |
| பிரசாத் - மருமகன் | UK- | + 447 799 666 706 |
| சாந்தினி - சகோதரி | Netherland - Mobile : | + 315 706 05507 |
| கிறிஸ்ரி - சகோதரன் | Denmark - Mobile: | + 452 482 1307 |
| ஆரோக்கியம் - மைத்துனர் | - Mobile : | + 947 7006 9884 |

(CS 45133) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...
ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான முகவர் அமைப்பின் பேச்சாளர் இது குறித்து எச்சரித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி முன்னெப்போதும் ஏற்பட்டிராத நெருக்கடி. இந்தப் பொருளாதார நெருக்கடி மேலும்மேலும் இறுகினால் அந்த நிலைமை மோசமான மனித நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும்.
பெருமளவான மக்கள் தற்போது போதிய உணவு இல்லாமல் இருக்கின்றனர். குழந்தைகள், சிறுவர்கள் உணவுக்குத் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது. போஷாக்குப் பிரச்சினைகளை இது ஏற்படுத்தலாம். அத்துடன், மருத்துவச் சேவைகள் மற்றும் சிறுவர் கல்வி என்பனவும் தற்போது சவாலுக்கு உள்ளாகியுள்ளன - என்றார். (அ-ம)

## ஆர்ப்பாட்டக்காரர்களின்...
நாடாளுமன்றில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டங்களை அமைதியான ஆர்ப்பாட்டம் எனக் கருத முடியாது. அவர்களின் கரங்களில் குருதிக்கறை படிந்துள்ளது. போராட்டத்துக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாத நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள அவர்களால் கொல்லப்பட்டுள்ளார். மதத்தலைவர்களால்கூட அவர்களை அன்று கட்டுப்படுத்த முடியவில்லை - என்றார். (அ-ம)

## விபத்தில்...
வீதி விபத்தில் காயமடைந்த நபர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். வைத்திலிங்கம் சிவானந்தன் (வயது-60) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
மானிப்பாயைச் சேர்ந்த குறித்த நபர், கடந்த 4ஆம் திகதி புன்னாலைக்கட்டுவன் தேவாலயத்துக்கு அருகாகச் சென்றபோது முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானார். இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## லிட்ரோ...
அவர், இவ்வருடம் ஏப்ரல் 21ஆம் திகதி லிட்ரோ நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். லிட்ரோ எரிவாயு நிறுவனத்தில் இதற்கு முன்னர் தலைவராக செயற்பட்ட துஷார ஜயசிங்க பதவி விலகியதை அடுத்தே அந்த இடத்துக்கு அவர் நியமிக்கப்பட்டார். தற்போது விஜித ஹேரத்தும் குறுகிய காலத்துக்குள்ளேயே பதவி விலகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## 18 மாணவர்கள்...
பாடசாலை மைதானத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் நேற்று நண்பகல் நின்றிருந்த வேளையில், அந்தப் பகுதியில் இருந்த குளவிக்கூடொன்று கலைந்ததை அடுத்து குளவிகள் மாணவர்களையும் ஆசிரியர்களையும் தாக்கத் தொடங்கியுள்ளன. இதையடுத்து 18 மாணவர்களும் 2 ஆசிரியர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-26-20)

## குருந்தூரில்...
கடும் எதிர்ப்பை மீறி நாளை ஞாயிற்றுக்கிழமை புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.
முல்லைத்தீவு குருந்தூர் மலையிலுள்ள தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டு இடங்களைச் சிதைக்கும் வகையில் பௌத்த ஆக்கிரமிப்பும் பௌத்த கட்டுமானங்களும் அங்கு நீண்ட நாள்களாக முன்னெடுக்கப்பட்டு வந்தன. இதற்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குகளும் நிலுவையில் உள்ளன. இந்த நிலையில், தமிழர்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் நாளை அங்கு புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. (ம)

## தங்கம்...
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
குறித்த வீட்டின் வளாகத்தில் பல கோடி ரூபா பெறுமதியான தங்கத் தகடு புதைத்து வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து அதனைத் தோண்டியெடுக்கும் முயற்சியில் சந்தேகநபர்கள் ஈடுபட்டுள்ளனர்.
சந்தேக நபர்களிடமிருந்து வெடிமருந்து மற்றும் புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. மின் பயன்பாடு அற்ற டெட்டினேற்றர்கள், மின் டெட்டினேற்றர்கள், யூரியா, யூரியாவை வெடிமருந்தாக மாற்றும் ஜெல் என்பனவும் அவற்றில் அடங்குகின்றன.
வீட்டின் உரிமையாளரைத் தவிர ஏனைய சந்தேக நபர்கள் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இதற்கு முன்னரும் புதையல் தோண்டிய பல்வேறு சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள்.
யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் திலீப் என். லியனகேயின் கீழ் உள்ள தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (அ-ம-26)

## எம்.பி...
21ஆவது திருத்தத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டு பஸில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நேற்றுமுன்தினம் விலகியிருந்தார். பெரமுனவின் தேசியப்பட்டியல் மூலமாகவே பஸில் பதவிக்கு வந்தார். அவரின் விலகலை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே தொழிலதிபர் தம்மிக்க பெரேரா பெரமுனவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்:
நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற பின்னர், அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட வாய்ப்பு உள்ளது என்றும் கூறப்படுகின்றது. (அ-ம)

## ஒரே...
முதற்கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
மன்னார் உயிலங்குளம் பகுதியில் கடந்த வாரம் மாட்டுவண்டிச் சவாரியொன்று நடைபெற்றுள்ளது. வெட்டிக் கொலைசெய்யப்பட்டவர்களின் உறவினர் ஒருவர் நொச்சிக்குளத்தில் வசித்து வருகிறார். அவருடனும் மாட்டு வண்டிச் சவாரியின்போது நொச்சிக்குளத்தைச் சேர்ந்த சிலர் தர்க்கத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. நேற்று வெள்ளிக்கிழமை காலை குறித்த நபர் நொச்சிக்குளத்தில் உள்ள தனது வீட்டில் இருந்து மாடு கட்டச் சென்றுள்ளார்.
இதன்போது மாட்டுவண்டிச் சவாரியின்போது தர்க்கத்தில் ஈடுபட்டவர்கள் குறித்த நபர் மீது வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டனரெனத் தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலில் காயமடைந்த அவர், பிரதான வீதிக்கு ஓடிவந்துள்ளார். வீதியில் நின்றவர்கள் அவரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துள்ளனர்.
இந்த நிலையில் குறித்த தமது உறவினர் தாக்கப்பட்டமை குறித்து நியாயம் கேட்பதற்காக, உயிலங்குளத்தைச் சேர்ந்த சகோதரர்களான யேசுதாசன் றோமியோ (வயது-40) மற்றும் யேசுதாசன் தேவதாஸ் (வயது-33) ஆகிய இருவரும் மோட்டார் சைக்கிளில் நொச்சிக்குளம் கிராமத்துக்குச் சென்றுள்ளனர். இதன்போது குறித்த இருவரையும் வீதியில் இடைமறித்து அவர்கள் மீதும் கடும் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் மன்னாரில் பேரதிர்ச்சியை உண்டு பண்ணியுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-56)

# லாப்ஸ் எரிவாயு
## விநியோக ஒழுங்கு 11.06.2022

### பருத்தித்துறை பிரதேச செயலகம்

| பெயர் | இடம் | சிலிண்டர் எண்ணிக்கை |
|---|---|---|
| சிற்றி பேக்கரி | பருத்தித்துறை | 15 |
| JM ரெஸ்ட் | பருத்தித்துறை | 15 |
| பிரான்ஸிஸ் ரேடர்ஸ் | பருத்தித்துறை | 20 |
| St பீற்றர் ஸ்ரோர்ஸ் | பருத்தித்துறை | 15 |
| பிரான்ஸிஸ் ரேடர்ஸ் வடி | பருத்தித்துறை | 10 |
| ரெயின்போ ஹாட்வெயார் | வளலாய் | 10 |
| KRM மில் | மந்திகை | 15 |
| மனோகரன் ஹாட்வெயர் | மந்திகை | 15 |
| ராஜன் ep | பருத்தித்துறை | 10 |
| வீரா ஹாட்வெயார் | கொற்றவத்தை | 15 |
| கண்ணன் ஸ்ரோர்ஸ் | கொற்றவத்தை | 10 |
| கங்கை ஸ்ரோர்ஸ் | பருத்தித்துறை | 10 |

### கரவெட்டி பிரதேச செயலகம்

| பெயர் | இடம் | சிலிண்டர் எண்ணிக்கை |
|---|---|---|
| அபிராமி ஸ்ரோர்ஸ் | நெல்லியடி | 15 |
| விஸ்வா ஸ்ரோர்ஸ் | நெல்லியடி | 20 |
| VTC ஒயில் மார்ட் | நெல்லியடி | 10 |
| குணம் அண்ட் சன்ஸ் | நெல்லியடி | 10 |
| சிவாஸ் ஸ்ரோர்ஸ் | கரவெட்டி | 10 |
| A.S.I.ஸ்ரோர்ஸ் | நெல்லியடி | 10 |
| பெற் சொய்ஸ் | நெல்லியடி | 15 |
| கண்ணன் ஸ்ரோர்ஸ் | நெல்லியடி | 10 |
| NVP ஹாட்வெயார் | புறாப்பொறுக்கி | 10 |
| ஓம் மல்ரி | உடுப்பிட்டி | 10 |
| கரன் பூட்சிற்றி | உடுப்பிட்டி | 10 |
| சாந்தன் மோட்டர்ஸ் | உடுப்பிட்டி | 10 |
| ஜெகா மோட்டர்ஸ் | உடுப்பிட்டி | 10 |
| SK சர்மா | நெல்லியடி | 10 |

### கோப்பாய் பிரதேச செயலகம்

| பெயர் | இடம் | சிலிண்டர் எண்ணிக்கை |
|---|---|---|
| சிவா ஸ்ரோர்ஸ் | கோப்பாய் | 10 |
| குமார் ஸ்ரோர்ஸ் | கோப்பாய் | 10 |
| ARP ஹாட்வெயார் | கோப்பாய் | 20 |
| ரூபன் ஸ்ரோர்ஸ் | இடைக்காடு | 10 |
| SNV ஹாட்வெயார் | நீர்வேலி | 20 |
| தேனுஜன் ஹாட்வெயார் | புத்தூர் | 10 |
| பவானி ஸ்ரோர்ஸ் | நீர்வேலி | 20 |
| சுமன் ஹாட்வெயார் | ஆவரங்கால் | 10 |
| ஷபா ஹாட்வெயார் | அச்சுவேலி | 10 |
| மயூரதி மோட்டர்ஸ் | அச்சுவேலி | 15 |
| MPCS அச்சுவேலி | அச்சுவேலி | 15 |
| விஷ்ணு ஹாட்வெயார் | ஆவரங்கால் | 10 |

### சாவகச்சேரி பிரதேச செயலகம்

| பெயர் | இடம் | சிலிண்டர் எண்ணிக்கை |
|---|---|---|
| ஹோட்டல்ஸ் | | 130 |
| நியூலக்ஸ்மி ரேடர்ஸ் | சாவகச்சேரி | 190 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 800 லாப்ஸ்...

பருத்தித்துறைப் பகுதிக்கு 160 சிலிண்டர்களும், கரவெட்டிப் பகுதிக்கு 160 சிலிண்டர்களும், கோப்பாய் பகுதிக்கு 160 சிலிண்டர்களும், சாவகச்சேரிப் பகுதிக்கு 320 சிலிண்டர்களும் இவ்வாறு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. (அ-ம)

### பாடசாலைகளுக்கும்...

களுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

### இளம்...

குறித்த பெண்ணின் கணவரும், இரு பிள்ளைகளும் லண்டனில் வசித்து வருகின்றனர். இவர் கடந்த 7 மாதங்களுக்கு முன்னர் லண்டனில் இருந்து வருகைதந்து வவுனியா, தோணிக்கல் ஆலடி வீதியில் வசித்து வந்த நிலையிலேயே ,நேற்றிரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்த இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-18)

### திங்கட்கிழமை...

ஜூன் 14ஆம் திகதி பொசன் பௌர்ணமி தினமாகும். அன்றையதினம் ஏற்கனவே விடுமுறை நடைமுறையில் உள்ள நிலையில் அதற்கு முன்னைய தினமும் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடுமுறை அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்கு இடையூறாக இருக்கக் கூடாது எனவும் பொதுநிர்வாக அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (அ-ம)

### டெங்குக்...

மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த நான்கு நாள்களாக அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பயன ளிக்காது உயிரிழந்தார். இறப்புத் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)


## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

ஆங்கிலம் ஓரளவு பேசத் தெரிந்த (30-40) வயதுடைய இலங்கை, இந்திய உணவுகள் நன்கு சமைக்கத் தெரிந்த ஆண்கள் தேவை.

நாடு : இங்கிலாந்து

076 560 1691

## கார், வான் வாடகைக்கு தேவை

தனியார் நிறுவனத்திற்கு கார்கள்/ வான்கள் சாரதி அல்லாமல் நீண்ட கால குத்தகைக்கு தேவை.

077 839 5849

## தென்னிந்திய யாத்திரை

தமிழ் நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி, கர்நாடகா ஆகிய 5 மாநிலங்களுக்கூடான யாத்திரையில் 60 க்கு குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

ஆரம்பம் : 01.07.2022

விருப்பமுடையவர்கள் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யவும் - விபரங்களுக்கு

கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்

077 768 0102

அனைத்து செலவுகளும் உட்பட

(CS 11677) (3/6)

## விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

யாழ் நகரின் அனுபவமும் தேர்ச்சியும் மிக்க முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில் புதிய கல்வியாண்டு

ஆரம்பம்

A/L 2024

12 ஆனி AM- 09.01

தமிழ் – திரு.பத்மநாதன்
ICT– S.மயூரதாசன்
புவியியல் – வி.செந்தூரன்
அரசியல் – கே.சபேசன்

தொழினுட்பப் பிரிவு
வழமையான அதே ஆசிரியர் குழாம்

வர்த்தகப் பிரிவு
கணக்கீடு – R.வின்சன்
வணிகக்கல்வி – ச.பிரதீபன்
பொருளியல் – பிரபல ஆசிரியர்

கலைப் பிரிவு
கணிதம் – இ.சுஜிதரன்
நாடகம் – S.கோணேஸ்
வரலாறு – பிரபல ஆசிரியர்

இன்றே இணைந்து புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

077 248 7774 / 076 552 9093

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு

நிலப்பரப்பு

- A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்ட் வோட்)
- A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :

காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 814 7389, 077 241 7589

## தேவை

யாழ்நகரில் இயங்கும் கையடக்க தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர் தேவை.

வயதெல்லை : 18 - 21 வரை

சம்பளம் : 20.000 - 30.000 /=

077 199 6117

## வீடு வாடகைக்கு

கண்டி வீதி (A9) மாம்பழம் சந்தியிலிருந்து 150 m நாவலர் வீதிக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

071 812 6021

## காணவில்லை



08.06.2022 அன்று இரவு 07.30 மணிக்கு சுதுமலை வடக்கில் பொம்மேரியன் நாய் (6 வயது) காணவில்லை. வயோதிபத் தாயொருவர் பாசமாக வளர்த்தவர். நாயைக் காணாதபடியால் மன உளைச்சலாகியுள்ளார். தயவு செய்து கண்டவர்கள் அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 912 2649

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 12 பரப்புக்காணி விற்பனைக்கு.

நிலப்பரப்பு.

- ✔ 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் A9 வீதி முகப்புடன் வாகனங்கள் தரித்து நிற்பதற்குரிய பாரிய இடவசதி வீதியுடன் அமைந்துள்ளது.
- ✔ வியாபார நிலையங்கள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த நல்ல தண்ணீர் மேட்டுக் காணி.
- ✔ நாவற்குழி சந்தியிலிருந்து கைதடி செல்லும் வீதி முகப்புடன் லங்கர் அசோக் லேடன் வாகன காட்சியறை நேரெதிரே அமைந்துள்ளது.
- ✔ பார்வையிடும் நேரம் : காலை 8.00 - மாலை 6.00 மணிவரை.

077 62 34 204
077 28 80 152

(CS 11801) 6


## மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 05 - 1953



மறைவு 09 - 06 - 2022

### இளையதம்பி சிவசுப்பிரமணியம் (மணியம்)

( பிரபல கருவாட்டு வியாபாரி )

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சிவசுப்பிரமணியம் (மணியம்) (பிரபல கருவாட்டு வியாபரி) மூன்றாம் பிட்டி நேற்று முன்தினம் (09.06.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி சிவக்கொழுந்து தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற மாணிக்கம் சின்னம்மா தம்பதிகளின் கனிஸ்ட மருமகனும் சிவபாக்கியத்தின் அன்பு கணவரும் பொன்னம்மாவின் பாசமிகு அன்புச் சகோதரரும், சிவனேஸ்வரன், சிவராஜேஸ்வரன், சிவராஜேஸ்வரி, சிவசுஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபாநாயகி, சிறிபிரியா, சந்திரகுமார், இராசன், ஆகியோரின் அன்பு மாமனும், பரமேஸ்வரி, மகாதேவன், பராசக்தி, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஸ்தூரி, நேருஜன், கேருஜன், யேருஜன், ஐவருஜன், தவருஜன், மோகித் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2022) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் புளியந்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி.சிவராஜேஸ்வரன் (மகன்)

077 614 7862

(CS 45129) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.